1241

ஓம்

# அருள்போத விளக்கம்.

இஃது

சென்னை, தென் மஹாராஷ்டிர இருப்புப்பாதையில்

மார்க்க பரிபாலகராக விருக்கும்

**தி. ம. கா. வில்வநாத முதலியாரால்**

சுவானுபவத்தைக் கொண்டு எழுதப்பட்டு,

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை

சிவஞ்ஞானபோத அச்சு யந்திரசாலையில்,

மயிலை-அழகப்ப முதலியாரால் பிரசுரிக்கப்பட்டது.

சாமல்கோட்டை, கோதாவரி ஜில்லா,

1922-ஞு ஜனவரி-மீ 1-உ.

ஓம்

# முகவுரை.

---

தற்காலம் ஹிந்துக்களே ஹிந்து மதக் கொள்கைகளில் வெறுப்புற்றனர். அது அம்மதக் கொள்கைகளை க்ஷீணித்து நிமித்தம் வேறு படுத்தியமையால் அவையும் வேறாகியது. அவ்வாறு மாற்றப்பட்ட அபிப்பிராயங்களை மாற்றுவதற்கே இப்பிரதியை எமது குருவின் கட்டளைப்படி பிரஜைகளின் க்ஷேமத்திற்காக எழுதப்பட்டது. இதனில் குரு திருவாய் மொழிந்தவைகளையும் சேர்த்து எழுதப்பட்டது.

இப்பிரதியைப் பிரசுரிக்கும் பொருட்டு எனது சகோதரர் ம-ள-ள-ஸ்ரீ மயிலை. அழகப்ப முதலியார் அவர்கள் தாம் கொண்ட சரீர கஷ்டத்திற்கும், தமது சிவஞ்ஞான போத அச்சு யந்திர சாலையைப் பொருளின்றி உதவியதற்கும் வந்தனங்கள் கூறுகிறேன்.

தி. ம. கா. வில்வநாதம்.

சாமல்கோட்டை,
20-10-1921.

ஓம்

இதை எமது குரு சிரேஷ்ட
ராகிய பித்தாபுரம் கோம
டம் ஸ்ரீ முத்து கிருஷ்ண
பரம ஹம்ஸ சுவாமிகள் அவர்
கள் திவ்ய திருவடிகளில்
பதிப்பிக்கப்பட்டது.

ஓம்

# அருள்போத விளக்கம்

## அட்டவணை.

—— : o : ——

பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | சிவராத்திரி மகத்வம் | 1 |
| 2. | பதார்த்தம் | 4 |
| 3. | ஒளி | 7 |
| 4. | குணம் | 10 |
| 5. | சுவை | 15 |
| 6. | நிர்க்குணம் | 19 |
| 7. | மணம் அல்லது வாசனை | 21 |
| 8. | சிற்றின்பம் | 23 |
| 9. | காலத்தை ஒப்படைத்தல் | 24 |
| 10. | சிருஷ்டி | 26 |
| 11. | ஆகாசமே காலம் | 31 |
| 12. | க்ஷுத் அல்லது பசி | 32 |
| 13. | நிராகாரம் | 34 |
| 14. | பஞ்ச லக்ஷணம் | 36 |
| 15. | ஜீவ அஜீவ திசை | 37 |
| 16. | நீலாம்பரம் பாவனை | 38 |

# ஓம்

ஓம்

சதாசிவம்

# சிவராத்திரி மகத்துவம்.

பித்தாபுரம் கோ மடம் ஸ்ரீ. முத்துகிருஷ்ண பரம ஹம்ஸ சுவாமிகள் அவர்கள் அருளிச் செய்தவை.

ஜீவ்ராத்திரி என்பது சிவராத்திரி என திரிந்தது. ஜீவோத்பத்திக்கு முன் சகலமும் பாழில் இருந்தபொழுது அவ்வித பாழினின்றும் இச்சா சக்தி, கிரியா சக்தி என இரண்டுவித சக்திகள் பிறந்தன. இவ்விரண்டும் பாழில் அணுக்களிலேயே தொந்தமாக அமர்ந்திருந்தன. அவைகளின் தொந்தங்கள் அதிகரித்த பொழுது வெளிப்படையாயின. இச்சா சக்தி, கிரியாசக்தி என்பவையே பிருதுவி ஆகாசம். பிருதுவி ஆகாசமே சிருஷ்டிக் காதாரம். அவைகளையே மாதா பிதா என் உலகத்தவர் கூறுவர். இவ்விரண்டு சக்திகளும் ஏகோபவித்த காலத்தில் சிவபெருமான் திருவருளால் ஞானசக்தி என்னும் சிருஷ்டியின் கலைகள் ஏற்பட்டன. அவ்வாறு ஏற்பட்ட காலத்தில் ஜீவராசிகளை ஓர் சமயம் சிருஷ்டிக்க நேர்ந்தது. அவ்வாறு நேர்ந்த சமயத்தையே உலகத்தவர் சிவராத்திரி எனக் கொண்டாடுகின்றனர். நாதபிந்து கலப்பதே சிருஷ்டி: நாதபிந்து கலந்தபோது அவற்றிற்கு கலைகளேற்பட்டது. அக்கலையே சிருஷ்டி. நாதம் ஒளியையும், பிந்து அவ்வொளியிலுள்ள களங்கத்தையும் குறிப்பிடும். பிந்துவே நமது தேகம். நமது தேகம் சிருஷ்டித்ததனுல் ஏற்பட்டது. சமயாசாரியர்கள் சிவராத்திரிக்காக சூரியனும் சந்திரனும் ஏகோபவிக்கும் சமயமாகிய அமாவாசையை எடுத்துக் கொண்டனர்.

அமாவாசைகளுள் மாசி மாதத்திய அமாவாசையை சிரேஷ்டமாக கொண்டனர். அச்சமயமானது சூரியன் ஜலதாரையை நாடுங் காலம் அதுவே மறு வருஷத்திற்கு மழைக் காதா

ரம். யோகத்திலும் ஆகாசத்தின் கங்கையானது காலும் பொழுது சிருஷ்டியின் கலைகள் விரிவாக காணப்படும். மாசி மாதமானது ஆகாயம் களங்கமற்று பனி சிறு துளிகளாக விழுங்காலம். அவ்வாறாக நமது மனமும் களங்கமற்று, பனித் துளிகள் விழுவதைப் போல் சிவபெருமான் திருவருளைப் பெற்று சிருஷ்டியின் கலைகளை தரிசிக்க வேண்டிய சமயமாம். அதற்காக சரீர சுத்திக்கு ஸ்நானமும், உடலிலுள்ள மலங்களை நீக்கி இருப்பதற்கு உபவாசமும், நியமங்களாக ஏற்படுத்தினர். அச்சமயத்தில் உலக விஷயங்கள் யாவையும் மறந்திருக்கச் செய்தனர். உலக விஷயங்கள் என்பது உலக வாசனை. வாசனை பதார்த்த குணம். பதார்த்தம் இச்சா சக்தி. பதார்த்தத்தாலாகியது இச்சரீரம். சிவராத்திரி என்னும் சமயமானது ஜீவன்களை சிருஷ்டித்த காலம். ஆகையினாலே அது மிக புண்ணிய காலம். அதை எல்லோரும் கொண்டாடுதல் வேண்டும்.

### பாழின் நிலமை.

பாழ் என்பது சிருஷ்டி யாவும் சொரூபமற்று, சுக்ல சுரோணிதமாய், ஜீவன்கள் கலையற்று, நாதம் பிந்து வற்று, வித்துக்கள் முளையற்று, வேதம் மூலமற்று, காலம் நிலையற்று, மூத்தி மரணமடைந்திருந்த நிலமையீரம்.

### பாழின் நிலமையை அடியில் விவரித்தவாறு காண்க.

பாழ்என்பது தற்காலம் நம்மிடத்திலும் உள்ளதே. அப்பாழில் வசிப்பவர் சிவபெருமான். பாழில் வசிப்பமையால் அவரை உலகத்தவர்கள் சுடுகாட்டில் வசிப்பவர் எனக் கூறுவர். சுடுகாடானது பாழ் நிலமாகவே இருக்கும். அவ்விடம் உலகத்தவருக்கு துக்கமாகவே காணப்படும். சிருஷ்டி என்பது அண்ட பிண்ட சராசரமும் நிறைந்துள்ளது. அதற்கு சொரூபமற்றது யென்றால் பின்னர் கூறியவாறு சுக்ல சுரோணித மாகியபொழுது மாயாசொரூபம் நீங்கியது என்பதை தெரிவிக்கும். மாயை என்றால் இவ்விடம் நிலையற்றதென விளங்கும். மாயை யென்றால் இருள் எனவும அருத்தம் கொள்ளலாம். இருள் என்பது எவ்வித வஸதுவும் அல்ல. சகலத்திலும் கலந்துள்ளது. அது ஒருவித குணம். வஸ்துவின்றி குணமில்லை. குணமின்றி காலமில்லை. (ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும்

இடையேயுள்ளது குணம். அதுவே காலம்) காலமின்றி நிலையில்லை.
(நிலை பரஸ்பரம்) நிலையின்றி சப்தமில்லை. சப்தமின்றி ஒளியில்லை.
ஒளியின்றி ஜீவனில்லை. ஒளி இல்லாதிருத்தலே இருள். அதுவே
மாயை. அது சிவபெருமான் திருவருளைப் பெற்றது. அவரது
திருவருளின்றி மாயைக்கு குணமில்லை. குணமின்றி ரூப
மில்லை. எப்பொழுது குணமுள்ளதோ அப்பொழுது வஸ்துவா
கின்றது. அதுவே ஆகாசம். ஆகாசம் வஸ்து வல்ல. குணத்தை
மாத்திரம் உடையது. எப்பொழுது ஆகாசம் குறைந்ததோ அந்
நிலைமையே பாழ். சுக்ல சுரோணிதம் என்பது. இச்சா சக்தி கிரி
யாசக்தி. சுக்ல சுரோணிதமாய் என்ற பொழுது, இச்சா
சக்தியிலும், கிரியா சக்தியிலும் சிருஷ்டி யாவும் ஒடுங்கி
மாயையின் குணம் குறைந்தது. என்பதை தெரிவிக்கும். நாம்
ஒடுங்குவதும் இவ்வாறே. முந்திய மாயையானது நிலையற்ற
தெனத் தெரிவித்தோம். ஜீவன்கள் கலையற்று என்றால் மாயை
அன்றியில் ஜீவன்களுக்கு கலையில்லை. எப்பொழுது மாயையின்
குணம் குறைந்ததோ அப்பொழுதே கலையும் அற்றது. கலை
என்றால் விருத்தி. தற்காலம் நாம் விருத்தியிலேயே இருக்கி
றோம். மாயை நிலையற்றதாகையால், நிலையற்றதினின்றும் கலை
எவ்வாறு உண்டாகும் எனில், கலையை விருத்தி என்றுரைத்
தோம். விருத்தி ஒன்றினின்றும் மற்றொன்றாவது. ஆகையால்
விருத்தி நிலையற்றது. தற்கால நிலையை மாத்திரம் உறியது. நா
தம் பிந்துவற்று என்றால் மேற்கூறியவாறு ஆகாசத்தின்
தத்வங்கள் குறைந்ததெனத் தெரிவிக்கும். தத்வம் என்றால் தம்
—துவம்—தம்மிடத்துள்ளது. தம்மிடத்துள்ளது தத்வப் பொ
ருள். வித்துக்கள் முளையற்று என்றால் உலகத்திலுள்ள செடி
கொடிகளின் வித்துக்கள் அல்ல. அவைகள் யாவும சிருஷ்டியின்
சொரூபம் அழிந்தபோதே நிர்த்தூளிகளாயின. வித்துக்கள்
முளையற்று என்றால் சிருஷ்டிக் காதாரம் குறைவு பட்டதென
விளங்கும். ஆகாசம் குறைவு படுதலே சிருஷ்டிக்காதாரம் குறைவு.
வேதம் மூலமற்று என்றால் வேதமே சப்தம். அதாவது ஓங்
கார சப்தம். எப்பொழுது ஆகாசம் குறைந்ததோ அப்பொழு
தே சப்தமும் அடங்கியது. இவ்வாறாகவே நமது சப்தமும் உலகத்
தில் அடங்குகின்றது. மூலமென்றால் ஆதாரம். சப்தத்துடன்கலந்
திருப்பது ஜீவகலை. வேதம் மூலமற்றது என்றால் ஜீவகலை ஒடுங்கி
யது என தெரிவிக்கும். காலம் நிலையற்று என்றால் கலையினின்

றும் காலம் பிறந்தது. எப்பொழுது கலை மாறியதோ அப்பொ ழுதே காலம் மரித்தது. கலை அன்றியில் காலமில்லை. காலமன் றியில் நிலையில்லை. கலையிலேயே காலம் நிலைத்திருப்பது. முத்தி மரணமடைந்த தென்பதில் முத்தியென்றால் ஆனந்தம். ஆனந் தம் காலத்தில் நிலைத்திருப்பது. ஆனந்தமே காலம். ஆகையால் அதுவும் மரித்தது. இவ்வாறிருக்கும் நிலைமையே பாழ். இதில் சதா ஆனந்தத்துடன் வசிப்பவர் சிவபெருமான். அவருக்குகாலம் எவ் வளவும் பற்றுதலில்லை.

## ஜீவ சிருஷ்டி.

இவ்வித பாழினின்றும் ஜீவன்களை சிருஷ்டித்தனர். ஜீவன் களை எவ்வாறு சிருஷ்டித்தனர் எனின், இச்சா மாத்திரத்தில் ஓம் என்னும் சப்தத்தி னின்றும் அணுக்களின் தொந்தங்களினால் மாயையை உற்பத்தி செய்து மாயையினின்றும் மூவுலகங்களையும் சிருஷ்டித்து, அம்மூவுலகங்களுக்கும் அணு தொந்தமாக ஜீவன் களை கற்பித்தனர். மூவுலகம் எவை யெனின், சிரசு, உடல், பா தம் என்னும் இச்சொரூபங்களே. அவைகளே இச்சாசக்தி, மாயா சக்தி, கிரியா சக்தி என்பவைகளாம். உடல் மாயா சக்தியாகை யால் அங்கு தோன்றும் ஸ்ரீ கிருஷ்ணனும் மாயா கிருஷ்ணன் எனப் பெயர் கொண்டனன்.

---

ஓம்

சதாசிவம்.

## பதார்த்தம்.

---

அடியிற் கூறியவை பித்தாபுரம் கோமடம் ஸ்ரீ முத்து கிரு ஷ்ண பரம ஹம்ஸ சுவாமிகள் அவர்கள் அருளிச் செய்தவை.

பதார்த்தமே யதார்த்தம். அது ஓர் சாக்ஷி. பதார்த்தமா னது பிருதிவி ஆகாசத்திலுள்ள தைல மலசத்தையும் கரிய மல வாயுவையும் கிரகித்து ஒரு ரூபத்தை அடைந்தது. பதார்த்தமே இச்சா சக்தி. இச்சா மாத்திரத்தில் பதார்த்தங்கள் சிருஷ்டியா

யின. ஆகாசத்திலுள்ள பிருதிவியே பிருதிவியிலுள்ள தைலமலச் சத்தை கிரகித்து ஆகாயத்திலுள்ள கரியமல வாயுவுடன் சம்பந்தித்து ஒரு ரூபத்தை அடைந்தது. அவைகள் ஆகாச கங்கையுடன் கலந்து பூமியை தாக்கியபோது வித்துக்களாயின. அணுக்களின் சலனங்கள் நிமிஷத்திற்கு கோடானுகோடியாக பூமியை தாக்குகின்றதென ஐரோப்பா தேசத்தவர்கள் கூறுவதும் இவ்வாறே. அணுக்களின் சலன சம்பந்தங்களினாலேயே இப்பிரபஞ்சம் நிலைபெற்றிருக்கின்றது. அவைகள் அவ்வாறு தாக்காவிடில் தைல மல சத்துகள் குறைவுபட்டு அணுக்களின் தொந்தங்கள் விடுபட்டு தூளிகளாகும். அவ்வாறாகிய வித்துக்களினின்றும் முளைகள் பிருதுவி சம்பந்தத்தினால் ஏற்பட்டன. முதலில் அவைகள் கொடி புற்பூண்டுகளாக இருந்தன. பிறகு விருக்ஷங்களாயின, இதற்கு திருஷ்டாந்தம் மூங்கில் புல் என்கிறோம். அவைகளின் இலைகளும் தண்டுகளும் மூங்கிலைப் போல் சித் சொரூபமாக இருக்கின்றன. நிலப்பனை என்கிறோம். அவைகளின் வேர் பனைமரத்தைப் போல் சிறிய ரூபமாகவும், இலை பனை ஓலையைப் போலும் இருக்கின்றன. இவைகள் சிறிய ரூபமாயினும் ஆதியில் இவைகளிலிருந்தே மூங்கிலும் பனையும் உற்பத்தியாயிருக்கவேண்டும். பிருதுவி சம்பந்தம் அதிகரிக்க அதிகரிக்க சிறியவைகள் யாவும் பெரியவைகளாயின. தற்காலம் பூமியில் தைலமலச் சத்துக்கள் அதிகரித்திருக்கிறபடியால் முந்தி சிறியவைகளாக இருந்தவையெல்லாம் இப்பொழுது பெரியவைகளாக இருக்கின்றன. இவ்வாறாகவே மனிதர்களிலும் புராணங்களில் கூறியவாறு முந்தி நெடுஞ் சரீரத்தையும் நீடூழி வாழ்க்கையையும் உடையவர்கள். தற்காலம் ஆகாசக் குறைவினால் குறுகிய சரீரத்தையும், அற்ப வாழ்க்கையையும் உடையவர்களாயினர். இன்னமும் ஆகாசம் குறையக்குறைய பிறந்த அன்றைக்கே தத்வ போதனைகளை செய்து அன்றைக்கே மரிப்பவரும் உற்பத்தியாகுவர்.

வித்துக்கள், கொடியாகி, கொடி இலையாகி, இலை செடியாகி; செடி அரும்பாகி, அரும்பு மலர்களாகி, மலர்கள் காயாய்கனியாய் மரிக்கின்றன. விருக்ஷங்களும் மரித்தவுடன் அவ்வவ் வஸ்துக்களில் அவ்வவ் வஸ்துக்கள் பிரிந்துபோய்க் கலந்து விடுகின்றன. பிருதுவி பிருதுவியிலும், ஆகாசம் ஆகாசத்திலும், மலசத்துக்கள் மலங்களிலும் கலந்து விடுகின்றன. அனேகருக்கு நிழலைத் தரத்

தக்க விசாலமுள்ள ஆலமரமானது விருக்ஷமாயினும், அதினின்றும் கொடிகளைப் போல் விழுது என்னும் வேர்கள் இறங்குகின்றன. அவைகள் கொடிகள் சம்பந்தமே. அம்மரத்தின் கிளைகளை தரித்து நட, கொடிகளைப் போல் அவைகளுக்கு வேர்கள் உண்டாகின்றன. எல்லா விருக்ஷங்களும் வித்தினின்றும் முளைக்கும் போது முதலில் அவைகளுக்குக் கொடிகளைப் போல் வேர்கள் இறங்குகின்றன. பிறகு கொடியைப் போல் செடி உண்டாகி அவை பெருகி செடியாகின்றன. அவைகளில் விடும் கிளைகளும் முதலில் கொடியைப் போல் தோன்றி, பிறகு பருமனாகின்றன. ஆகையால் செடிகளெல்லாம் கொடிகள், கொடிகளெல்லாம் வேர்கள். வேர்களெல்லாம் வித்துக்கள். அவ்வாறாகவே பிரம்மனும் ஸ்ரீமந் நாராயணனுடைய நாபிக் கமலத்திலிருந்து தாமரைக்கொடியில் உற்பத்தியானதாக சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. யோகத்தினால் நமது நாபிக் கமலத்திலுள்ள மணிபூரகத்தினிடமாக கொடியைப் போலும் ஓர் வஸ்து காணப்படும். ஆகையால் பிரம்மத்தின் நிரூபமும் அவ்வாறாகவே இருக்கின்றது. இதைக் கண்டறிந்த சிவராஜ யோகி என்னும் ஜீவராஜயோகியாகிய விஸ்வாமித்திரனும் அச்சக்திகளை தனது யோகபலத்தினால் உற்பத்தி செய்து சிருஷ்டிகளைச்செய்தனன். அவ்வாறாகவே நாமும் அச்சக்திகளை கைவல்யம் செய்யும் பக்ஷத்தில் விஸ்வாமித்திரர்களாகலாம். தர்ப்பை, நாணல், கொருக்கு, சோளம், கம்பு, கரும்பு, மூங்கில் இவைகள் யாவும் வெவ்வேறு வித்துக்களாயினும், ஒரே வகுப்பைச் சார்ந்தவைகள். ஆதியில் இவைகள் யாவும் ஒன்றிலிருந்தே உண்டாயிருக்க வேண்டும்.

பதார்த்தங்களினாலாகியது இக்கர்ம சரீரம். கர்ம சரீரத்துள்ள ரத்தமெல்லாம் பதார்தத்தாலாகியது. ரத்தத்தினின்றும் உண்டாவது பிந்து அல்லது ரேதஸ். ஆகையால் ரேதஸ் பதார்த்த குணமுடையது. அது பதார்த்தத்தையே மறுபடி தேடுகின்றது. ஆகையினாலே ரேதஸாலாகிய இக்கர்ம சரீரம் பதார்த்தத்தினாலேயே போஷிக்கப்படுகின்றது. பதார்த்தம் ரூபத்தை உடையதாயினும் நிலையற்ற குணமுடையது. சதா ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறிக் கொண்டே இருப்பது. நீடுழி காலம் ஒன்றிலேயே வாழ்வதில்லை. பதார்த்தமானது சிருஷ்டியின் கலை

கள் குறைவு பட்டவைகள். அறிவானது அவற்றில் சூக்ஷ்மமாக இருக்கின்றது. ஆகையினாலே ஆவைகள் மானிடனைக் கண்ட மாத்திரத்தில் தம்மை ரக்ஷிப்பவனென மிக ஆனந்திக்கின்றன.

---

ஓம்

சதாசிவம்.

# ஒளி.

---

ஒளியென்பது பிரகாசம். அது எங்கும் நிறைந்துள்ளது. எல்லாவற்றிலும் கலந்துள்ளது. சில வஸ்துவில் சூக்ஷ்மமாக விருக்கின்றது. சில வஸ்துவில் பிரகாசிக்கின்றது. ஒளி இல்லாத வஸ்து எதுவுமே கிடையாது. இருளிலும் அது கலந்திருக்கின்றது. அணுக்களில் சலனம் இல்லாதது இருளாயிற்று. சலனமடைந்தது ஒளியாயிற்று. ஆகையால் இருளும் ஒளியும் ஒன்றே. வெவ்வேறு குணத்தை மாத்திரம் உடையன. அவற்றையே ஜடம் அஜடம் என்பர். அணுக்கள் சலனமற்றிருத்தலே பாழ். அதில் வசிப்பவர் சர்வ சாட்சியாயுள்ள சிவபெருமான். பாழ் அவருக்கு எவ்வளவும் பற்றுதல் இல்லை. சலனமே சிருஷ்டிக் காதாரமாயிற்று, சலனமே சிருஷ்டி. சலனமே இச்சா சக்தி.

## சக்தி மகிமை.

இச்சா சக்தியானது சத், சித், ஆனந்தம் என்னும் மூன்று வித தன்மைகளையுமுடையது. சத் என்பது பதார்த்தம். சித் மனஸ் ஆனந்தம் காலம். இடம், பொருள், ஏவல் என்னும் இம் மூன்றுவித தன்மைகளையுமுடையது. சத்—பதார்த்தம், சித்—மாயை, ஆனந்தம்—கலை அல்லது சிருஷ்டி. சலனமே சிருஷ்டி. சலனமற்றதே பாழ்; சத்—பிருதுவி, சித்—ஆகாசம், ஆனந்தம்—பிரஜைகள்.

இவ்வாறாக படிப்படியாக சிருஷ்டி ஏற்பட்டது. முதலில் தமதத்துவ கினின்றும் மாயையை சிருஷ்டித்து அதினின்றும் இச்சா

சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தியென மூன்றுவித சக்திகளையும் பிறப்பித்து அவற்றிற்கு 96 தத்துவங்களையுடைய மானிட தேகத்தை கவசமாக ஏற்படுத்தி அதில் தத்வப் பொருளை ஸ்தாபித்தனர். ஆகையால் மானிடன் 96 தத்வங்களுக்கும் அதிகாரஸ்தனாயினன்.

மாயை யென்றால் ரூபமென்றருத்தம் கொள்ளலாம். ரூபமென்பது அழகு. ஆகையால் மாயை சிவனது அழகே. தமதழகினின்றே எல்லாவற்றையும் சிருஷ்டித்தனர். தமது ரூபத்தினின்று எவ்வாறெல்லாம் கலைகள் மாறிற்றோ அவ்வாறெல்லாம் சிருஷ்டிகள் ஏற்பட்டன. ஆகையால் மாயையினின்றும் 96 தத்வங்களையுடைய மானிட தேகமானது ஏற்பட்டது. ஆகையால் அது மாயையைப் போல் நிலையற்றதாயிற்று.

மும்மூர்த்திகள்.

ஒளி நாமரூபமற்றது. நிர்க்குண நிரஞ்சன நிராமய மாகியது. ஒளியே ஆகாசமாயிற்று. ஆகாசமே மலங்களாயிற்று. மலங்களே ரூபமாயின. ரூபமே, நாமங்களாயிற்று. நாமங்களே வேதங்களாயின. ஒளியே பிரணவமும் மும்மூர்த்திகளுமாயிற்று. பிரணவமே அகார, உகார, மகாரம். ஒளி ஓங்கார மாயிற்று. இருள் மாயையாயிற்று. இவ்விரண்டுமே சக்தி சிவம். ஒளியே பிரம்மம். ஒளியில் ஒளியாயிருப்பது சிவம். சிவம் சாக்ஷி. ஒளியே சைதன்யமுமாயிற்று. சைதன்யமே விஷ்ணு. விஷ்ணுவே மாயை. மாயையே லீலைகளாயிற்று, லீலைகளே 96 தத்வங்களாயின. 96 தத்வங்களையுடையது இம்மானிட தேகம். அதில் வசிப்பது தத்வப் பொருள்.

எதிர் மறை.

தன்னிலையில் காணாதது எதிர்மறையில் காணப்படும். ஒளி என்றால் மறை என்றும் அருத்தம் கொள்ளலாம். மறைக்கப்படுவது எது வென்னின் வேதமென்பர். வேதமென்பது சப்தம். ஒளி

யே சப்தமாகும். ஒளியே ஓங்காரமுமாம். ஓங்காரம் நம்மிடத்துள்ளதே. ஓங்காரத்தினாலேயே நாம் உலகவிஷயங்களை நடத்திவருகிறோம். ஓங்கார மின்றியில் நாமரூபங்களே கிடையா. இதனால் நாம் சப்தத்திலேயே வாழ்கிறோமென நன்று விளங்குகின்றது. அதை மறைப்பது எதுவெனில், முந்தி ஓர் காலத்தில் அசுரர்கள் வேதங்களை மறைத்தனரெனவும், பிறகு அதைத் தேவர்கள் விடுவித்தனரெனவும், புராணங்கள் கூறுகின்றன. அசுரர்களென்பது அஞ்ஞானமே. அஞ்ஞானமே ஒளியை மறைப்பது. அதை தவிர்க்க நாம் பிரம்ம சொரூபிகளாக வேண்டும். பிரம்ம சொரூபிகளாவதற்கு யோகநிலை வேண்டும். யோக நிலைக்குப் பதார்த்த குணங்களை மறக்க வேண்டும். பதார்த்த குணங்களை மறக்க இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி, யென இம்மூன்று சக்திகளின் அனுக்கிரகம் பெறவேண்டும். அவ்வனுக்கிரகம் பெற சத்குருவின் பாதாரவிந்தத்தில் அடையவேண்டும். அவ்வாறடைந்து தேறியவர்களே, ஜீவன் முக்தர்களும் பிரம்ம ஞானிகளுமாவர். அவர்களே ஓங்காரத்தை உணர்ந்தவர்கள். அவர்களே அந்தணர்களாவர். மற்றவர்கள் யாவரும் உணராதவர்களே. தற்காலம் அச்சப்தம் நமது செவிபிற்படா திருப்பதற்கு காரணம் நாம் சதா சப்தத்திலேயே வாழ்வதினாலேயே. சர்க்கரையில் சர்க்கரை எவ்வாறு ருசிக்கும். சமுத்திர நீரில் வாழும் மீன்களுக்கு உப்பின் சுபாவம் எப்பொழுது தெரியவருமெனின், ஆற்றுநீரில் நீஞ்சும் பொழுதே தெரியவரும். சமுத்திர நீர் எவ்விடத்திலும் உப்பாகவே இருக்கும். ஆகையால் அது எங்கும் சமமாகவே இருக்கின்றது. ஆகையால் நாம் சமத்தில் இருப்பதினால் அச்சப்தம் நமக்கு கேட்கவில்லை. ஒளியினின்றும் விலகிய போதே இருள் காணப்படும். ஒளியில் இருள் காணாது. அது போல் சப்தத்தினின்றும் விலகியபோதே சப்தத்தைக் கேட்கலாம்.

---

ஓம்

சச்சிதானந்தம்

# குணம்.

குணம் நிறத்தினல் உண்டாவது. நிறம் ஒளியினின் றுண் டாவது. ஒளியின் மாறுபாடே நிறம். நிறம் குணபேதகம். குணத்தினின்றும் காலம் ஏற்பட்டது. காலம் இருவித குணத்தி னிடையே யுள்ளது. காலத்தினல் ரூபங்கள் ஏற்பட்டன. இதையே கலைமாறுதல் என்பர். ரூபத்தினின்றும் நாமங்கள் ஏற்பட்டன. ஆகையால் நிறத்தினின்று குணமும், குணத்தினின்று காலமும், காலத்தினல் ரூபமும், ரூபத்தினின்று நாமங்களு மேற்பட்டன. மானிடர்களிலும் ஜீவ கலைகள் எவ்வாறெல்லாம் மாறுகின்றனவோ அவ்வாறெல்லாம்அதற்கு குணங்கள்ஏற்படுகின்றன. குணத்தின் சுபாவமே மனது. மனது இச்சா சக்தி. இச்சா சக்தி யத்தனிக்கின்றது. கிரியா சக்தி அதை ஞான சக்திக்கு தெரிவிக்கின்றது. ஞான சக்தி விவகாரத்தை நடத்துகின்றது. இச்சா சக்தி பிருதுவி. கிரியா சக்தி ஆகாசம். ஞான சக்தி இவற்றினின்றும் உண்டாகிய தெளிவு. தெளிவே அறிவு மயம். ஆகையால் ஞானசக்தி என்பது புத்தி. ஆகையால் புத்தி விவகரிப்பது. புத்தி பஞ்சேந்திரியங்களுக் கருவியாக ஏற்பட்டது. பஞ்சேந்திரியங்களே பஞ்ச அறிவு, பஞ்ச உணர்ச்சி, அவைகளே பஞ்சபூதங்கள். ஆகையால் மனது பஞ்சபூதங்களினலாகியது. மனது இச்சா சக்தி. ஆகையால் பஞ்ச பூதங்களும் இச்சா சக்தியில் தோன்றுபவைகள். இச்சா சக்தியானது நாபிக் கமல முதல் ஹிருதய கமலம் வரையில் வியாபித்திருப்பது. குணம் மாறுபாடுடைய தாகையால், மனது சலன மடைகின்றது. மனதை ஏக நிலையில் நிறுத்த இந்திரியங்களை யடக்க வேண்டும். இந்திரியங்களை யடக்க தந் நிலையைக் கண்டறிய வேண்டும். தந் நிலையைக் காண யோகநிலை வேண்டும்.

## சகுணம்.

சமகுணம் என்பது சகுணம் எனத் திரிந்தது. குணம் என்பது தோற்றம். தோற்றமே ரூபம். ரூபத்தின லுண்டாகியது

நாமம். ஆகையால் நாமமே யோகம். இதைக் குறிப்பிட்டே கோயிலிலும் சஹஸ்ர நாமமென அர்ச்சனை செய்கின்றனர். சஹஸ்ர நாமங்களையும் பெற்றது பிரம்ம ஜோதி. அர்ச்சனை ஆகிய பின்னர் ஜோதி தரிசனமென தீப ஆராதனையை செய்கின்றனர். இவ்வாருகவே நாம் ஜோதி தரிசனத்திற்காக யோகம் செய்கிருேம். யோகம் ரூப நாமங்களைக் கொண்டே செய்யவேண்டும். இதுவே சகுணம். ரூபநாமங்களை குறிப்பிட்டே நாம் பிறந்தவுடன் நமக்கு நாமகரணம் செய்கின்றனர்.

## குணவர்ணனை.

சம குணத்தினின்றும் தோன்றிய 64 லீலைகளும், 96 தத்துவங்களாக மாறின. 96 தத்துவங்களினல் மானிட தேகம் அமைக்கப்பட்டது. அதற்கு விவகாரஸ்தராக தத்துவப் பொருளை ஏற்படுத்தினர். அது உத்தான, வியான, சமான, நிதானம் என்னும் வியாபகங்களையும், சத்வ ரஜஸ்தமோ குணங்களையும் பொருந்தியது. முந்தி புத்தி விவகாரத்தை நடத்துவதாகக் கூறி இருக்கின்றது. இங்கு ஆத்மா விவகாரஸ்தர் எனக் கூறுகின்ருேம். ஆத்மா புத்தியில் வியாபகத்தை உடையது. சதா அறிவில் வாழ்வது. புத்தி பஞ்ச உணர்ச்சியையும் உடையது. அறிவு பஞ்ச உணர்ச்சியும் நீங்கியது. தத்துல்யமானது. அதுவே அறிவு. அறிவே ஞானம். ஞானமே துரிஸ்யம். இதற்குத் திருஷ்டாந்தம் பாரதம்.

## மானிட தேகம்.

96 தத்துவங்களினலாகிய இம் மானிட தேகமும் அதில் உள்ள தத்துவப்பொருளின் திருகுணங்களாகிய சத்வ ரஜஸ்தமோ குணங்களுமே பாரதத்தில் கூறிய 99 துரியோதனதிகளுமாவர். மானிட தேகத்திற்கும் அதில் வசிப்பதற்கும் எவ்வாறு தொந்தமிருக்கிறதெனில், திருகுணங்களினலேயே 96 தத்துவங்களும் ஏற்பட்டன. ஆகையால் 96 தத்துவங்களுக்கும் திருகுணங்களுக்கும் சம்பந்தம் இருக்கின்றது. ஆகைபினலே மானிட தேகத்திற்கும், 96 தத்துவங்களுக்கும் சம்பந்தம் இருக்கின்றது. மரித்த பின்னர் 96 தத்துவங்களும் பிரிந்துபோய் 96 தத்துவங்களிலும் கலந்துவிடு

கின்றன. திருகுணங்கள் மாத்திரம் நிற்கின்றன. இங்கு ஹிந்து மதத்திலுள்ள மும்மதமாகிய துவைத, அத்வைத, விசிஷ்டாத்வைத மும் சமுகமாகின்றன. துவைதிகள் ஜீவன்களுக்கு குணங்கள் மாறுபாடில்லை யெனவும், விசிஷ்டாத்வைதிகள் குணங்கள் மாறுபடினும் ஜீவன்கள் ஜீவன்களாகவே ஸ்ரீமன் நாராயணனுடைய கர்ப்பத்தில் நின்று விடுகின்றன வெனவும், அத்வைதிகள் குணங்கள் மாறுபட்டு ஜீவன்களும் பிரம்ம தேஜஸில் கலந்து விடுகின்றனவெனவும் கூறுகின்றனர். குணங்கள் மாறுபட நெடுங்காலம் செல்கின்றது. அதற்காகவே நாம் வாசனையுடன் சம்பந்தித்து அடிக்கடி பூலோகத்தில் மானிடர்களாக பிறக்கிறோம். மரித்த பின்னர் இத்தொண்ணூற்றாறு தத்துவங்களைகுறிப்பிட்டே கர்மாந்திரம் எனச் செய்கின்றனர். கர்மாந்திரம் என்பது கர்ம சரீரத்தின் முடிவு. அதையே கடைசியில் செய்கின்றனர். யோகிகளும் சாதுக்களும் ஜீவிதகாலத்திலேயே தாம் 96 தத்துவங்களையும் பிரித்துக் கொடுக்கும் வல்லமையை அடைகிறபடியால் அவர்களுக்கு சமாதி என்னும் யோக நிலையைத் தெரிவிக்கும் கிருத்யங்களைச் செய்கின்றனர். துரியோதனாதிகளுள் 100 வது ஸ்ரீ என்பது நம்மிடத்துள்ள சக்தியை குறிப்பிடும். சக்தியோடொத்தது சிவம். சிவம் சாக்ஷி. ஆகையினாலே ஆத்மா திருகுண அதீதம். பதார்த்தமே 96 தத்துவங்களுமாகும்.

## இந்திரியங்கள்.

சிவம் சாக்ஷியாய்விட்டபடியால் 96 தத்துவங்களையும் நடத்துதற்கு ஞானேந்திரியம், கர்மேந்திரியம் என தசேந்திரியங்கள் ஏற்பட்டன. அவைகளே பாண்டவர்களும் உப பாண்டவர்களுமாவர். மனஸ் பஞ்ச பூதங்களினாலாகியது. ஆகையால் பஞ்ச பூதங்களும் பாஞ்சாலியாவள். இப் பஞ்ச பூதங்களும் ஆதியில் ஜடாக்னியினிடமாக தோன்றியமையால் பாஞ்சாலியானவள் அக்னியில் பிறந்தாளென கூறுகின்றனர். இவற்றை இன்னமும் விரிவாகக் கூறும் பொழுது ஸ்பர்சமே காலமாகின்றது. காலம் தருமத்தை நிலை நிறுத்தக் கூடியது. காலத்தில் தோன்றுபவன் எமன். ஆகையால் அவன் காலன் எனப் பெயர் கொண்டனன் அவன் நம்முடைய காலத்திலேயே வாழ்பவன். காலமானவுடன் இத்தொண்ணூற்றாறு தத்துவங்களையும் பிரித்துக் கொடுப்பதற்கே

சகாய புருஷனாகத் தோன்றுகிறான். அவன் எவ்வளவும் பக்ஷபாதமின்றி அமுல் செலுத்துபவன். அவனை அறியாமல் உலகத்தவர் தூஷிக்கின்றனர். அவன் நம்முடைய காலமே. அவனையே காலாக்னி என்பர். சம்ஹார கால ருத்திரனும் அவனே. சங்கரனும் அவனே யாவன். அவன் நம்முடைய முதுகெலும்பின் தசைகளினிடையே ஒளி கொண்டிருப்பன். அவ்விடமே எமபுரம். அவ்விடத்தில் ஓங்காரத்தை மறைத்தால் எம பாதை நீங்கும். அது மறுபடி ஓங்காரத்துடன் சம்மந்திக்கும் வரையில் நீங்கி இருக்கும். அதற்காகவே பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாதவாசத்திற்காக தமது அஸ்திரங்களை ராக்ஷஸனுடைய முதுகெலும்பில் ஒளித்து எமனைக காவல் வைத்ததாக கூறுகின்றனர். நம்முடைய அஸ்திரமும் ஓங்காரமே. அதினாலேயே நாம் எல்லா வேலைகளையும் உலகத்தில் முடித்துக் கொள்ள வேண்டும். காலனுடைய புத்ரன் தருமனாகையால் ஸ்பர்சமே தருமனாவன். ஸ்பர்சத்திற்கு தொந்தமாயுள்ளது வாயு. வாயு அன்றியில் ஸ்பர்சமில்லை. ஆகையால் வாயு புத்ரனாகிய பீமன் தருமனுக்கு சொந்தமாயினன். அவ்வாறாகவே நாம் ரேசிக்கும் வாயுவும் ஆத்மாவுக்குத் தொந்தமாக இருக்கின்றது. ஆகையால் பீமன் வாயுவேந்திரிய மாகுவன். இந்திரியங்களுக் கெல்லாம் அதிபதி இந்திரன். இந்திரனுக்கும் அகலிகையால் ஏற்பட்ட சாபத்தால் உடம்பெல்லாம் கண்ணாயிற் றென்கின்றனர். நேத்திரம் இந்திரியங்களுக் கெல்லாம் மூலமாயுள்ளது. நெற்றி எல்லாவித வெற்றியையும் தரக்கூடியது. நெற்றி விசாலமாயுள்ளவர்களே அரசர்களும் ரண வீரர்களுமாவர். ஆகையால் இந்திரனுடைய புத்திரனாகிய அர்ச்சுனன் நேத்திரங்களாகுவன். சப்தம் அக்னியினால் உண்டாவது. சப்தேந்திரியம் செவி. ஆகையால் அஸ்வனி தேவரின் குமாரனாகிய நகுலன் சப்தேந்திரிய மாகுவன். அதினாலேயே நகுலன் மாந்திரீக சிரேஷ்டன் என்றனர். வார்த்தையாடும்போது வாக்கும் மனசும் ஏகோபவிக்க வேண்டும் என்பர். முன்னர் கூறியவாறு மனஸ் யத்தனிக்கின்றது. அதை ஆகாசம் ஸ்பர்சேந்திரியமாகிய செவியினிடமாகத் தெரிவிக்க ஸ்பரிசத்தில் பட்டதை, புத்தி தெரிந்து வாக்கை வார்த்தையாடச் செய்கின்றது. இவ்வாறாக உலகத்தில் நம்முடைய சப்த வாழ்க்கையானது இருக்கின்றது. ஆகையினாலே வாக்கும் செவியும் ஏகோபவிக்க வேண்

டும். வார்த்தை சப்தமாகையால், அது அக்கினியினலேயே உண்டாவது. ஆகையால் அஸ்வனி தேவரின் குமாரனுகிய சகாதேவன் வாக்காவன். சகாதேவன் சாஸ்திரத்தில் வாக் வல்லபன். நகுலன் செவி யாகையாலும், சகாதேவன் வாக் காகையாலும் இவ்விரண்டும் வார்த்தையாடும் போது ஏகோபவிக்கவேணுமாகையால் நகுல சகாதேவர்கள் இரட்டைப் பிறப்பென்றனர்.

## புத்தி.

மேற்கூறியவாறு சிவம் சாக்ஷியாய் விட்டபடியால், மானிட தேகத்தை நடத்துதற்கு தசேந்திரியங்களையும் கருவிகளாகவும் அவற்றிற்கு சாரதியாக புத்தியையும் ஏற்படுத்தினர். ஸ்பர்சமே மனஸ் ஆகின்றது. துரிஸ்யமே புத்தியாகின்றது. புத்தி எல்லா வித வியாபகத்தையும் உடையது. அதற்காகவே புத்தியை வாயு வேகம் மனோ வேகம் என்றனர். ஸ்பர்சமே கிருஷ்ணன். துரிஸ்யமே ராமன். ஆகையால் ராமகிருஷ்ணன் என்னும் நாமகரணமுள்ளது ஆத்மாவே யாகும். இவ்வாறாக ராமகிருஷ்ணர்களிருவரும் ஆன்மாக்களை உலகத்தில் நடத்தித் திருப்பிக் கொண்டு போகிறபடியால், ஸ்ரீ கிருஷ்ண பகவானை அர்ச்சுனனுக்குச் சாரத்தியம் செய்தனரெனவும், ஸ்ரீராமரை கோடானுகோடி வானர சைன்யங்களை உடன்கொண்டு ராவணனை சங்கரித்ததாகவும் கூறினர். வானர சைன்யம் யாவும் அக்னி மண்டல முதல் வாயுவு மண்டலம் வரையில் வியாபித்திருக்கும் ஆகாசமே யாகும். இம் மண்டலங்கள் நமது தேகததிலும் உள்ளவை. ராவண சம்ஹாரம் என்பது ஆன்மாக்களைப் பற்றிய பாபங்களை துலைத்தலேயாகும். பாரத யுத்தமென்பது இத் தொண்ணூற்றாறு தத்வங்களையும் பிரித்துக் கொடுப்பதற்காக நாம் எல்லோரும் புரியும் போராகும். அவ்வாறு பிரிக்க காலம் ஏற்பட்டிருக்கின்றது. அதையே பாரத யுத்தமானது 18 நாள் கொண்டதாக கூறுகின்றனர். தாரக நாமத்தை ஓர் தரம் உச்சரித்தால், தான் செய்த பாபங்களெல்லாம் துலையுமென்பர். தாரக நாமங்களுள் ராம என்பது ஒன்று. மூலாதாரத்தினிடமாக ராம என்னும் சப்தம் உற்பத்தியானல் சகல பாபங்களும் துலையும். ராம என்னும் சப்தமானது ஓங்காரத்திலிருந்தே பிறக்கின்றது. ராம என்னும் சப்தம் மூலாதா

ரத்தில் உற்பத்தியாவதற்கு தம்மிடத்துள்ள ஆகாசம் பரிசுத்த மாகவேண்டும். அவ்வாறு ஆகாசம் பரிசுத்த மடைதலே நிக்குணம்.

---

ஓம்

சச்சிதானந்தம்.

## சுவை.

---

அடியிற் கூறியவை பித்தாபுரம் கோ மடம் ஸ்ரீ முத்துகிருஷ்ண பரம ஹம்ஸ சுவாமிகள் அவர்கள் அருளிச் செய்தவை.

### அறுசுவை.

சுவை என்பது ருசி. அதனில் உப்பு, புளிப்பு, இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, காரம் என 6 விதம் உப்பினின்று புளிப்பும், புளிப்பி னின்று இனிப்பும், இனிப்பினின்று கசப்பும், கசப்பி னின்று துவர்ப்பும், துவர்ப்பி னின்று காரமும் உண்டாகியது. ஆகையால் உப்பே மூலாதாரமாக இருக்கின்றது. உப்பு எவ்வாறு உண்டாகிய தெனில், அகஸ்தியமா முனிவர் சமுத்திர நீரைத் திரட்டி ஆசமனியம் செய்து நீரிட உப்பாயிற் றென வேடிக்கை கதையாகக் கூறுவர். உப்பு சமப்புவிலிருந்து உண்டாகியது. சமப்புவானது தைலமலச் சத்து. தைலமலங்கள் கங்கையி னின் றும் தோன்றுபவைகள். கங்கையுடன் கரியமல வாயுவு சம்பந்தித்தபோது உப்பாகின்றது. இதற்கு திருஷ்டாந்தம். தற்காலம் நாம் உட்கொள்ளும் சோடா என்னும் ஜலமே. சமுத்திர நீரும் நெடுங்காலம் சலனமின்றி சதா கரியமல வாயுவுடன் சம்பந்தம் கொள்வதினால் உப்பாயிற்று. தைல மலத்தை கிரகித்தவைகளே பதார்த்தமாயின. எவ்வெவைகள் எவ்வெவ்வாறு கிரகித்தனவோ அவ்வவைகள் அவ்வவ்வாறு ருசித்தன. ஆகையால் பதார்த்தம் உப்பி னின்றும் தோன்றியவை. ஆகையால் அவை உப்பில் அழிவு பெறுவதில்லே. உப்பு மேற்கூறியவாறு தைலமலத்தினின்றும் உண்டானது. தைலமலம் பிருதுவி ஆகாசம்

தத்தினால் தோன்றுபவை. பிருதுவி ஆகாசமானது நம்மிடத்தும் உள்ளவைகளே. ஆகையால் நம்மிடத்திலும் பதார்த்தம் அடங்கியே இருக்கின்றது. நாம் யதார்த்தமாகையால் நம்மிடத்துள்ள பதார்த்தமும் யதார்த்தமாகியது. பசி பதார்த்த குணம். ஆகையால் பதார்த்த குணத்தை பதார்த்த குணத்திற்கே கொடுக்கும் பக்ஷத்தில் பசி அடங்கிவிடும். இவ்வாறாகவே தபஸிகள் பசியை போக்கடித்து மூச்சை மூலபந்தம்செய்து நீடூழிகாலம் உலகத்தில் சமாதியில் வாழ்கின்றனர்.

## சுவையின் பேதம்.

திராக்ஷை உப்பு என்கிறோம். திராக்ஷைப் பழமானது புளிப்பையும் இனிப்பையும் உடையதென நம்மெல்லோருக்கும் பரஸ்பரமாய் தெரிந்த விஷயமே. அதில் உப்பும் கலந்தே இருக்கின்றது. அது வித்துக்களில் இருக்கின்றது. அப்படி உப்புகளிருப்பதினாலேயே பெரும்பாலும் வித்துக்களெல்லாம் துவர்ப்பாக இருக்கின்றன. வித்தானது பிருதுவி சத்தை கிரகித்து உண்டானது. பிருதுவியில் உப்பு இருக்கின்றது. அதை நீரின் மூலமாகசெடியானது கிரகித்து வித்துக்குக் கொடுக்கின்றது. உப்பே செடிகளுக்கெல்லாம் உணவு. ஆகையினாலே துவர்ப்பு உப்பினின்றே உண்டாகின்றது. எல்லாக் கனிகளும் ஆரம்பத்தில் துவர்ப்பாகவே விருக்கின்றது. செடிகள் முளைக்கும் போது முந்தி எவ்வாறு வேர்கள் உண்டாகின்றனவோ அவ்வாறு கனிகளுக்கெல்லாம் வித்துக்கள் முதல் முதல் உண்டாகின்றன. அவைப் பெருகி பெருகி அவைகளுக்குத் தசைகள் ஏற்படுகின்றன. பிறகு அவை பெருகி ஒரு ரூபமாகின்றன. துவர்ப்பு உப்பினின்றும் உண்டாயியதாலும், உப்பு பிருதுவி சத்தாகையாலும், கனிகளும் பிருதுவி சத்தாகையாலும் அவைகளுக்கு முதல் துவர்ப்பு உண்டாகின்றது. ஆகையினாலே, உப்பானது எல்லா வித்துக்களிலும் இருக்கின்றது. நமக்கு உண்டாகும் எல்லா வியாதிகளையும் ஒன்பது உப்பினாலேயே சிலர் சுவஸ்தப்படுத்துகின்றனர். நமது சரீரத்திற்கும் உப்பே அதிகம் வேண்டியிருக்கின்றது. உப்பு குறைவுபடுதலினாலேயே எல்லா [illegible]திகளும் தோன்றுகின்றன. யூனானி வைத்தியர்களும் பெ[illegible]ம் வினாகளையே முறையாகக் கொள்கின்றனர். அதற்கு

காரணம் அவைகளிலுள்ள உப்பே. கனிகள் உண்டாகும் போது உப்பின் சுபாவம் குறையக்குறைய துவர்ப்பும் குறைந்து அவற்றி னின்றும் புளிப் புண்டாகின்றது. இதற்குத திருஷ்டாந்தம் மாங் கனியே. மாங்கனியில் புளிப்பு குறையக்குறைய இனிப்பு உண் டாகின்றது. இனிப்பு அதிகரிக்க அதிகரிக்க கசப்பாகின்றது. இதற்கு திருஷ்டாந்தம் கரும்பே. கசப்பு மாற துவர்ப்பாகின் றது. இதற்கு திருஷ்டாந்தம் மிளகாயே. மிளகாய் பிஞ்சாக இருக்கும் போது கசக்கும். சிறிது முதிர அவற்றின் விரைகள் துவர்ப்பாக விருக்கும். பிறகு அவை காரமாகின்றன. மிளகாய் விரையை அரைத்து சாப்பிட்டால் மல சுத்தியாகும். அதற்குக் காரணம் அதிலுள்ள உப்பே. இஞ்சியை அரைத்து அதின் நீரை தெளியவிட அதில் சுண்ணும்பு வெண்மையாய் அடியில் தங்குகின் றது. அச்சுண்ணும்பும் உப்பே. இஞ்சியில் காரம் இருக்கின் றது. அது அதிலுள்ள சுண்ணும்பின் குணமே. சுண்ணும்பின் காரமும் உப்பே யாகும். கற்களிலும் உப்பு இருக்கின்றது. உலோகங்களிலும் உப்பு இருக்கின்றது. இதற்கு திருஷ்டாந்தம் மயில் துத்தமே. உப்புச் சத்துக்களை மாற்றினுல் குறைந்த லோ கமும் உயர்ந்தன வாகின்றது. அதற்காக பூனீரும் செயநீரும் வேணுமென்பர். இவ்விரண்டு நீர்களும் உப்பே யாகையால் எல் லா வஸ்துவிலும் உப்பு இருக்கின்றது.

## சுவையின் குணம்.

உப்பின் சுபாவம் புத்திகூர்மையைத் தரக்கூடியது. புளிப்பு அதை மந்தப்படுத்துவது. இனிப்பு ஆனந்தத்தை விளைவிப்பது. கசப்பு துக்கத்தைத் தருவது. துவர்ப்பு சோம்பலைத் தருவது. காரம் கோபத்தை விளைவிப்பது. இவைகளுக்கே காலமேற் படுத்தி, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி, ஞாயிறு யென ஏழு தினங்களாக்கினர். இவ்வேழு தினங்களும் 12 மாதங்களாயின. இதில் ஒவ்வொரு தினங்களில் ஒவ்வொரு ருசியையே சுகிக்கவேணும். அதற்காகவே உபவாசமென நிய மங்கள் ஏற்படுத்தினர். குறிப்பிட்டவைகளைக் குறிப்பிட்ட தின களில் போசனம் செய்வதே உபவாசமாகும்.

## பதார்த்த நியமம்.

அவ்வாறு குறிப்பிட்ட தினங்களில் பதார்த்த நியமம்செய்ய வேண்டும். பதார்த்த நியமமாவது போஜனம் செய்யும்போது ஒரு பதார்த்தத்தை ருசித்தால் அப்பதார்த்தம் பூர்த்தியாகும் வரையில் மறு பதார்த்தத்தில் கை வைக்கப்படாது. இதையே ஏக பத்தினி விரதம் என்பர். கனிகளைப் புசிக்கும்போது ஒரு கனியைப் பூர்த்தியா யொருவனே கொள்ள வேண்டும். கனிகள் செடிகளிலேயே கனிந்தவைகளாக விருக்க வேண்டும். அவ்வாறு செடிகளில் கனிந்தபொழுதே அவைகளின் தத்வங்கள் ப்ரிபூரணத்தை அடைகின்றன. அவ்வாறு தத்துவங்கள் பரிபூரணத்தையடைந்த வஸ்துக்களை நாம் புசிக்கும்போது நம்முடைய ஆயுள் விருத்தி யடைகின்றது. தத்வம் பரிபூரண மடையாத வஸ்துக்களை இச்சித்தாலும் புசித்தாலும் ஆயுள்க்ஷீணமடையும். அதிக்கிரமித்த போஜனத்தினாலும் தத்வங்கள் மாறுபட்டு ஆயுள் க்ஷீணமடைகின்றது.

## பரிபூரணம்.

எவ்வஸ்துவும் தன்னிச்சையாய் முதிர்ந்து பழுக்கும்போதே அவைகளின் தத்வங்கள் பரிபூரண மடைகின்றன. இவ்வாறாகவே யோகிகளும் யதேச்சையாய் வனங்களில் திரியும்போதே அவர்களின் தத்வங்கள் பரிபூரணத்தை யடைகின்றன. அதற்காகவே அவர்கள் வனங்களுக்குச் செல்கின்றனர். இன்றியமையாத ஆனந்தம் அவ்விடத்திலேயே இருக்கின்றது.

## ஆயுள்.

ஆயுளென்பது நம்முடைய உலக வாழ்க்கை அதுவே காலம். அது சரீரத்திற் குரியதே யன்றி ஆன்மாவுக் குரியதல்ல. ஆன்மாவானது எக்காலத்திலும் ஏக நிலையில் நின்று விடுவதே. அதற்கு ஆயுளே கிடையாது. ஆயுள் சரீரத்திற்குப் பதார்த்த சம்பந்தங்களினால் ஏற்படுகின்றது. எவ்வெவ் வஸ்துக்களைப் புசிக்கிறோமோ, அவ்வவ் வஸ்துவின் குணமும் காலமுமே நமக்கு ஏற்படுகின்றன. அதற்காகவே நாம் பதார்த்த நியமம் செய்வ தவ... நம்முடைய ஆயுளானது நீடிக்க, தத்வங்கள் பரிபூரண... நெடுநாள் செல்லும் பதார்த்தங்களையே நாம் புசித்து வர

வேண்டும். அப்பொழுதே நாம் நீடூழி காலம் வாழலாம். இப்படிக்கு நம்முடைய தத்வங்கள் பரிபூரண மடைந்தபோது நாம் எத்தனித்தவைகள் யாவும் நாம் நினைக்கும் போதே கைகூடிவரும். இதுவே இச்சா சக்தி. சரீரத்தின் தத்வங்கள் குறைவு படுதலினுலேயே இச்சக்தியின் சுபாவம் குறையும். அதையே வியாதி என்பர். இச்சா சக்தி குறைவுபடுதலினுலேயே வியாதிக் கிடமாகின்றது. வியாதிக்குரிய காரணங்களையே நாம் சதா விலக்கிவர வேண்டும். அதுவே பரிபூரணம்.

---

ஓம்.

சச்சிதானந்தம்.

## நிர்க்குணம்.

---

நிர்க்குணம் என்பது எவ்வஸ்துவிலும் கலவாமல் எவ்விதத் தோற்றமும் இல்லாமல் ஏகநிலையில் நிற்றலே. அவ்வாறு நிற்பவனையே சர்வேச்வரன் யெனவும், சச்சிதானந்தன் யெனவும் கூறுவர். குணம் என்பது தோற்றம். தோற்றம் விகாரத்தினுலுண்டாவது. விகாரம் வஸ்துவின் குண பேதம். குண பேதங்களினுலேயே நாம் உலக வாசனையை அடைகிறோம். உலக வாசனையை அடைந்த பின்னர், நாம் சுகிப்பது யாவும் மலங்களாகவே ஏற்படுகின்றன. ஆகையினுலே நாம் நிர்மல நிராகார வஸ்து எதுவோ அதையே நாடி நிற்கவேண்டும். அதுவே ஆகாசம். ஆகாசம் எவ்வாறெல்லாம் பரிணமிக்கின்றதோ அவ்வாறெல்லாம் நமக்கு குணங்கள் ஏற்படுகின்றன. அதையே ஜன்மாந்திர சுகிர்தம் என்பர். ஜன்மாந்திர சுகிர்தமாவது நாம் ஜன்ம ஜன்மங்களாக ஆண்டனுபவித்து வருவது. அதையே தொன்றுதொட்டு வருவதென்பர்.

இச்சை.

ஜன்ம ஜன்மங்களாக நாம் ஆண்டனுபவித்து வருவது இச்சையே. இச்சையே எல்லாவற்றிற்கும் காரண பூதமாயுள்ளது. இச்சையினுலேயே நாம் உலகத்தில் ஜன்மிக்கிறோம். இச்சையினுலேயே நாம் உலகத்தில் எல்லாவித பதவியையும் அடைகிறோம்.

இச்சைக்காகவே எல்லாவித பதவியையும் துலைக்கிறோம். இச்சையை தவிர்த்தலே சுகிர்தத்திற் கிடமாகும். அதுவே நிர்க்குணம்.

## ஆனந்தம்.

நிர்க்குணம் என்பது ஆனந்தம் எனவும் கூறலாம். ஆனந்தம் காலத்தில் நிலைத்திருப்பது. காலம் பரிபூரணத்தை யடைந்தது. அதையே கலி என்பர். கலி எல்லாவித கல்வியையும் உடையது, கல்வி குணப் பெருக்கிற்காக வேண்டி யிருக்கின்றது. கல்வி என்றால் அறிவு. அறிவு தேஜோமயம். ஆகையால் அறிவானது தேஜோமய ஆனந்தமே.

## கம்யம்.

நிர்க்குணமாவது கம்ய ஸ்தானத்தை அடைவதே. அவ்விடமே நாம் அடையவேண்டிய இடம். அவ்விடத்திலிருந்து ஆத்மா பிரிந்தால் முக்தி அடையும். அவ்வாறு பிரிய ஆகாச சம்பந்தம் அதிகரிக்க வேண்டி யிருக்கின்றது. யோகிகளும் தபசிகளும் பாடுபடுவதெல்லாம் இதற்காகவே. கம்யம் என்றால் அடைதல். ஆடினால் காசிதனில் ஆடவேணும், அடைந்தால் சிதம்பரத்தில் அடையவேணும், பாடினால் எம்பெருமானைப் பாடவேணும் என்றவாறு நாம் அடையவேண்டிய இடம் சித் அம்பரமே. சித் அம்பரமாக இருக்கப்பட்ட இடம் சித் ஆகாசம் தங்குமிடம். சிதாகாசம் தங்குமிடம் மனது. அதுவே ஹிருதய கமலம். அம்பரம் என்றால் ஒளி. ஆகையால் ஹிருதய கமலமானது எல்லாவித ஒளியையும் தரக்கூடியது. அதுவே கம்ய ஸ்தானம். அவ்விடத்திலடைந்தால் முக்தி. அவ்விடம் செல்ல புத்தியைக் காவல் வைத்துச் செல்லவேண்டும்.

## சிதம்பரம்.

இவற்றைக் குறிப்பிட்டு சிதம்பரத்தில் பொன்னம்பல சபையில் ஆகாசத்தை அக்கினி பூர்வமாகப் பூஜிக்கின்றனர். அதற்காக நடராஜ விக்ரகத்தில் கோமேதகக் கல்லை மார்பில் பதித்து வைத்திருக்கின்றனர். அக்கல்லின் சுபாவம் ஜோதியை பரவெளியாக்கும். அது பதிக்கப்பட்டிருக்குமிடம் கம்ய ஸ்தானத்தைக் குறிப்பிடுகின்றது. ஆகையால் கோமேதக மணிந்தவர் யோகியாவர்.

இவ்வாறாக நமது சகுணோபாசனைகள் யாவுமே நிர்க்குணத்திற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. அதற்காக கோயில்களில் ஆகாச தத்வங்களைக் குறிப்பிட்டு, ஆகம விதிகளும், உற்சவாதிகளும் ஏற்படுத்தி இருக்கின்றனர்.

---

ஓம்

சச்சிதானந்தம்.

## மணம் அல்லது வாசனை.

---

அடியிற் கூறியவை பித்தாபுரம் கோ மடம் ஸ்ரீ முத்துகிருஷ்ண பரம ஹம்ஸ சுவாமிகள் அவர்கள் அருளிச் செய்தவை.

வாசனை ஆகாச சம்பந்தத்தினால் ஏற்படுவது. வித்துக்கள் பூமியிற் பட்டவுடன் அதனிலுள்ள நீரையும், வாயுவிலுள்ள ஆகாசத்தையும் இழுத்துச் செடியாக முளைக்கின்றன. அவ்வாறு கிரகிப்பதற்கே ஆவரண சக்தி எனப் பெயர். ஆவரணம் என்றால் கிரகிப்பது. கிரகித்தவைகளைத் திரும்பக் கொடுப்பதே விக்ஷேபம். அதாவது, பிரதிபலிப்பது விக்ஷேபம். செடிகள் ஆகாசத்தை கிரகிக்கின்றன, பிறகு அவ்வாகாசத்தை மணமாகத் திரும்பக் கொடுக்கின்றன. அவற்றிற்கே ஆவரணம் விக்ஷேபம் எனப் பெயர். நாம் பதார்த்தங்களைப் புசிப்பதினால் நமக்கு அவ்விரண்டு சக்திகளும் உண்டாகின்றன. செடிகள் ஆகாசத்தை அதிகமாய்க் கிரகிக்கிறபடியினாலேயே, அவற்றினடியில் மானிடனைத் தவம்புரியச் சொல்கின்றனர். செடியானது ஆகாசத்தைக் கிரகிக்கும்போது, அவனது ஆகாசத்திலுள்ள மலங்களையும் கிரகித்து விடுகின்றது. அதற்காகவே யோகியானவன் செடியினடியில் தவம்புரிய வேணும். அதற்காகவே ஈச்வரனும் தமது தபசுக்கு அக்ஷயம் என்னும் ஆலவிருக்ஷத்தை சங்கல்பித்து வைத்துக் கொண்டிருக்கின்றனர். அது மலங்களையெல்லாம் கிரகித்து விடுகின்றது. ஆகையால் சங்கல்பமே விருக்ஷமாயிற்று. ஆகையினாலே சங்கல்பத்தைப் போக்கடிக்க நாம் பதார்த்த நியமம் செய்யவேண்டும். ஆகாசத்தை அதிகமாய்க் கிரகித்தவைகள் எல்லாம் வேர்கள் வாசனையாகவும், தண்டுகள் வாசனை

யாகவும், இலைகள் வாசனையாகவும், புஷ்பங்கள் வாசனையாகவும் இருக்கின்றன. அதற்குக் காரணம் அவைகளி லுள்ள மதுரமே சுவையே மணமாக மாறுகின்றது: இவ்வாறாகவே நமது மனமும் மாறுதற்கு இனிப்பான வஸ்துக்களையே நாம் புசித்து வரவேண்டும்.

பால்யம்.

பால்யத்தில் நம்முடைய உடலில் இனிப்பே அதிகரித்திருக்கிற படியால், நமதுஅறிவு சைதன்ய மயமாகஇருக்கின்றது. அப்போது நாம் உட்கொள்ளும் தாய்ப்பாலும் இனிப்பாகவே இருக்கின்றது. ஆகையினாலே, நமக்குப் பால்யத்தில் உலக விஷயங்கள் யாதொன் றும் தெரிவதில்லை. பிறகு தத்வங்கள் சேரச்சேர நாம் உட் கொண்ட வஸ்துவின் குணங்களே நமக்கு ஏற்படுகின்றன. ஆகை யால் நாம் பதார்த்தங்களினாலேயே உலக வாசனையை அடைகி றோம். அதற்காகவே நாம் பதார்த்த நியமம் செய்வ தவசியம்.

யௌவனம்.

செடிகள் முதிர்ந்து புஷ்பிக்கும்போது, அவற்றி னின்றும் மணமானது எப்படி வீசுகின்றதோ அப்படி நாம் யௌவனத்தை அடைந்தவுடன் மணக்கோலம் கொள்கிறோம். அப்பொழுதே நாம் உலக வாசனையை அடைகிறோம். உலக வாசனையை அடை தலையே மணம் எனப் பெயரிட்டனர். அதைக் கண்டு நமக்கு விவாகம் செய்து வைக்கின்றனர். ஈச்வரன் உலக சிருஷ்டிக்காக எவ்வாறு சக்தியை மணம்புரிந்தனனோ, அவ்வாறு நாம் பிரஜா உற்பத்திக்காகக் கன்னிகையை மணம் புரிகிறோம். வரன் என் றால், மணம் புரிந்தவன் என்று அருத்தமாகின்றது. ஈச்வரனும் சக்தியை மணம் புரிந்தவனே. இதைக் குறிப்பிட்டே கோயில் களிலும் பிரம்மோற்சவக் காலங்களில் திருக்கல்யாண மகோற்சவ த்தைச் செய்கின்றனர். புஷ்பமானது புஷ்பித்தவுடன் அதிலுள்ள மணமானது எப்படி நம்மை அவற்றி னிடமாகக் கவருகின்றன வோ, அப்படி கன்னிகை யானவள், யௌவனக் காலத்தில் நம் மைக் கவருகிறாள். யௌவனம் மாறும்போது, எப்படி புஷ்பத்தி னின்றும் கனிகள் தோன்றுகின்றனவோ அப்படிப் புதல்வர்கள் உற்பத்தியாகின்றனர்.

ஓம்

சச்சிதானந்தம்

## சிற்றின்பம்.

"ஊருடன் கூடிவாழ்" என ஔவை கூறியவண்ணம் உலகப் பெருக்கே சிற்றின்பம். சிற்றின்பம் என்றால். சிறிய இன்பம். தோன்றி மறைவது. காலத்துடன் சம்பந்தப்படாதது. சங்கல்பத்தினால் ஏற்படுவது. சங்கல்பமே இச்சா சக்தி. இவ்வாறாக நாம் உலகத்தில் சம்பந்திப்பவைகள் யாவும் நமது இச்சாசக்தியில் தோன்றியவைகளே. சங்கல்பத்தினாலேயே எவ்வஸ்துவையும் கொள்கிறோம். சங்கல்பமில்லாவிடில் எதையும் இச்சிக்கவுமாட்டோம், பார்க்கவுமாட்டோம். இதற்குத் திருஷ்டாந்தம் பார்க்கக் கூடாமல் தூரத்திலுள்ள வஸ்துவைக் கேள்வியினால் பார்க்க இச்சிப்பதே. கேள்வியினால் பார்க்க சங்கல்பிக்கிறோம். அது கைக்கூடுகின்றது. இச்சை பரிபூரணமாகியபோதே அது கைகூடுகின்றது. இவ்வாறாக ஒவ்வொரு வஸ்துவையும் நாம் சங்கல்பத்தினாலேயே அடைகிறோம். நமது மனைவி மக்கள் யாவும் இச்சா சக்தியில் தோன்றியவைகளே. அது பிருதுவி சம்பந்தத்தினால் ஏற்படுகின்றது. ஆகையால் தோற்றமே சங்கல்பமாகின்றது. சங்கல்பமே காலமாகின்றது. காலம் இருவித குணத்தினிடையேயுள்ளது.

### உலகப் பற்று.

வஸ்துவே உலகப்பற்று. அது மாயா சம்பந்தத்தினால் ஏற்படுவது. மாயை நாமாகில் அது மறந்து விடும்.

### பேரின்பம்.

இச்சையை மணம் புரிதலே பேரின்பம். அப்பொழுது இச்சைத் தானேயாகிறான். தற்காலம் இச்சைத் தனித்திருப்பதினாலேயே இச்சை இன்னதெனத் தெரிய வருகின்றது. தானே அதுவாகில் இன்னதெனத்தெரியாது. அப்பொழுது எல்லா வஸ்துவும் தானேயாகிறான். தன்னில் எல்லாம் லயமாகின்றன. இதுவே இச்சையை மணம்புரிதல். ஈச்வரன் உலக சிருஷ்டிக்காக எவ்வாறு சக்தியை மணம்புரிந்தனனோ அவ்வாறு யோகியானவன் தனது யோகம் நிலை பெறுமாறு பீஜாக்ஷரத்திற்காக இச்சா சக்தியை மணம்

புரிகிறான். அதுவே ஆனந்தம். அதுவே காலம். அப்பொழுதே அவனுக்கு எமபாதை நீங்குகின்றது. மார்க்கண்டேய னாகிறான்.

காலச் சக்ரம்.

சங்கல்பமே காலமாகின்றது. காலம் குண ரகிதமானது. குணம் சப்தத்தில் தோன்றுவது. சப்தம் நாமாகிறோம். (சப்தப் பொருள் நம்மிடத்துள்ளதே). ஆகையால் காலம் நாமாகிறோம். காலம் நாமாகிறோம் என்றால் காலம் நமக்கு அன்யமானதல்ல. நம்மில் வாழ்வது. அதுவே அறிவு. அதுவே பேரின்பம். ஆகையால் ஆனந்தமே காலமாகின்றது. ஆனந்தமே அறிவு மாகின்றது. அவ்வித அறிவு நீங்கியது தோற்றம். அதுவே சிற்றின்பம். சிற்றின்பமானது காலத்தி லிருந் துண்டாகியது. காலத்துடன் சம்பந்திக்காதது. புத்தி காலத்துடன் சம்பந்திக்காதது. இது பிரத்யேகாத்மாவில் நின்று எழுதியது. இதுவே காலச் சக்கரம்.

இதை புத்திக்குச் சம்பந்தித்து விட்டால் நாமாகிறோம். புத்தி சிற்றின்பம். அறிவு பேரின்பம். இதினின்றும் காலத்தை ஒப்ப டைக்க வேண்டுமென ஒரு கேள்வி பிறந்தது. காலம் குணபேத ங்களினால் உண்டாகியது. ஆனந்தமே நிர்க்குணம். ஆகையால் காலத்தில் தோன்றுபவைகள் யாவும் மறைபனவே. அறிவு நம் மில் ஆனந்தமாக இருக்கின்றது. இதர வஸ்துக்களில் கம்யமாக இருக்கின்றது. ஆகையால் அறிவே காலம். அறிவு பஞ்ச உண ர்ச்சியும் நீங்கியது. அதுவே நிர்க்குணம் அல்லது கம்யம்.

---

ஓம்

## காலத்தை ஒப்படைக்க வேண்டும்

---

O என்னும் ஆங்கில பாஷையின் எழுத்தை காலத் தைத் தெரிவிக்கும்போதெல்லாம் உபயோகப் படுத்துகின் றனர். அது சூன்யத்தி னெழுத்து அவ்வாறு அதை உப யோகப்படுத்துவதினால் காலம் சூன்யத்திலிருந்து உண்டாயிற் றென விளங்குகின்றது. எல்லா பாஷைகளிலும் எழுத்து கள் வெவ்வேறாகினும் சப்தம் ஒன்றே.

தமிழ் பாஷையில் "ஓ" என்னும் எழுத்தானது சிரசைப் போலுமிருக்கின்றது. சிருஷ்டிக்கு முன் தோன்றியது ஓம் என்னும் சப்தமே. கிருஸ்து மதத்தினர் சூன்யத்திலிருந்து காலத்தை நியமித்ததாகவும், நாம் சிரசிலிருந்து நியமித்ததாகவும், அக்ஷர ஞானத்தால் விளங்குகின்றது.

### அக்ஷரம்

அக்ஷரம் என்றால் க்ஷரம் அல்லாதது. க்ஷரம் வஸ்து வாகையால், அக்ஷரம் வஸ்து அல்லாதது எதுவோ அதை தெரிவிப்பதே. அதற்காகவே பாஷை ஏற்பட்டிருக்கின்றது. அது ஞானத்தால் விளங்கும். ஞானம் பாஷையினால் உண்டாவது. பாஷைகளில் எழுதியிருக்கும் விஷயங்களை வாசிப்பதாலும், கேட்பதாலும் உண்டாகின்றது. விஷயங்களைத் தெரிந்தவர்களுடன் சம்பாஷிப்பதாலும் உண்டாகின்றது, விஷயங்களைத் தெரிவிப்பது பாஷை. வஸ்துவைக் காண்பது புத்தி.

### வஸ்து.

சலனமுடையது வஸ்து. சலனத்தால் வஸ்து எனப் பெயர் கொண்டது. எப்படி சலனம் உண்டாயிற்றோ அப்படியே சலன அழிவையும் அடைகிறது. அதற்காகவே அதற்கு குணமும் காலமும் சம்பவிக்கின்றன.

### ஈசன்.

ஈசனது முக்கண்களானது நமது இரண்டு கண்களும் அவற்றினிடையேயுள்ள திருமேனியுமாம். அதுவே தீண்டாத் திருமேனி. அதுவே அறிவு. நெற்றியில் இரு கண்களினிடையேயுள்ளது. எல்லா வஸ்துவும் அதிலேயே லயமாகின்றது. லயம் என்றால் ஆனந்தம். எல்லாம் அதிலேயே ஆனந்தமடைகின்றது. அதற்காகவே நேத்திரம் வேண்டுமென நாம் கோருவது. சிருஷ்டி அதிலிருந்தே உண்டாயிற்று. பார்வையினால் உண்டாயிற்று. அதுவே காணப்படுவது காண்பது இவ்விரண்டுமாகும். இவ்விரண்டும் சேர்ந்தது பரமசிவம் என முந்திய உபந்நியாசங்களில்



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
183291

எழுதி இருக்கின்றது. ஆகையால் சிருஷ்டி பரமசிவத்தி னின்றே உண்டாயிற்று. அதற்காக ஆனந்தத் தாண்டவ மாடியதாகப் புராணங்கள் கூறுகின்றன. சிருஷ்டி அழிவும் அதிலேயே. ஆகையால் சிரசு நம்முடைய தேகத்தில் மிகச் சிறந்தது. பஞ்ச மூர்த்திகளும் அதிலேயே வாழ்கின்றனர். பஞ்சேந்திரியங்களுள் நான்கு அதிலேயே இருக்கின்றன. அதற்காகவே அதற்கு நான் முகன் எனப் பெயர். அதற்கு ஒரே எழுத்து ஏற்படுத்தி இருக்கின்றனர். மூலாதாரத்தி னெழுத்து 'ம' மூலாதாரத்திலும் சிருஷ்டிகளைச் செய்யலாம். சிருஷ்டி, திதி, லயம் என இம் மூன்றும் சம்பவிக்கும் காலங்களில் சிருஷ்டிக்கலாம். அதற்காகவே ஈச்வரனுக்கு சிவ சாம்பவன் எனப் பெயர் வந்தது. நம்மையும் சாம்பசிவன் எனவும், சாம்பமூர்த்தி எனவும் பெயரிட் டழைக்கின்றனர். சாம்பசிவன் என்றால் சிருஷ்டித்தவன் என்று அருத்தமாகின்றது. ஆகையால் ஓம் என்பது சிரசு முதல் மூலாதாரம் வரையில் வியாபித்திருப்பது. அதுவே ஆத்மா. அ, உ, ம, இம்மூன்றும் கூடியது. அதுவே நாம்.

---

ஓம்

நமச்சிவாயம்

## சிருஷ்டி.

---

சிருஷ்டி நம்மில் இருக்கிறதாக முந்திய உபந்நியாசத்தில் எழுதி இருக்கின்றது.

ஒருவனு யுலகேத்த நின்ற நாளோ
வோருருவே மூவுருவ மான நாளோ
கருவனைக் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரித்தநாளோ
மான் மறிக்கை யோந்தியோர் மாதோர் பாகம்
திருவினள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே.

என சிவபெருமானைக் குறித்து திருவாரூர் பதிகத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பட் டிருக்கின்றது.

உலகேத்த என்றால் உலக சிருஷ்டிக்காக என்று அருத்தமாகின்றது. சிருஷ்டி தன்னிலேயே இருப்பதால் அதற்கு காலம் வேண்டுவதில்லை. இச்சா மாத்திரத்தில் உண்டாகின்றது. உலகேத்த என்பது உலகனைத்தும் என்றிருந்தால் மிக ரம்மியமாகவிருக்கும்.

ஒருவனு யுலகேத்த நின்ற நாளோ என்றால், சிருஷ்டியை லயம் செய்துகொண்டு ஏகாந்தமாக இருந்த நாளோ என்று அருத்தமாகின்றது. ஒருருவே மூவுருவமானநாளோ என்றால், ஏக பராபரமாக இருப்பவர் சிருஷ்டிக்காக பிரம்மா, விஷ்ணு, சிவன் என மும்மூர்த்தி யாயினர் என்று அருத்த மாகின்றது. ஆக்கல், அழித்தல், அடைதல் என்னும் இம்மூன்றும் ஒரே வஸ்துவில் அடங்கியது. இவற்றையே மூன்று நாமங்களாகவும் ரூபங்களாகவும் வர்ணனை செய்கின்றனர். சத்வ ரஜஸ்தமோ குணங்களே மும் மூர்த்திகளாம். சத்வம்—பிரம்மா, ராஜசம்—விஷ்ணு, தாமசம்—சிவம். சிவம் எப்பொழுதும் தாமஸிகமே. ஆகையினாலேயே அடியிற் கூறியவண்ணம் காலனையும் காமனையும் தாமஸ குணத்தினாலேயே எரித்தனர். கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ என்பதில், கருவனாய் என்றால் கர்வமுடையவனாய் என்று அருத்தமாகின்றது. தாமஸ குணமுடையவனே கர்வ முடையவனாகிறான். காலனை முன் காய்ந்த நாளோ என்றால், யமனை முன் வீழ்த்தினர் என்று அருத்தமாகின்றது. சிருஷ்டிக்கு முன்னிருந்த அந்தகாரமே. யமன். அதையே அந்தகார விருஷ்ணி என்பர். காலன் என்றால் எமன். எமனை எதற்காக வீழ்த்தினர் யெனின், சிருஷ்டிக்குக் காலமில்லை. எமன் காலமாகையால் சிருஷ்டி அழிவுபெறும். அதற்காகவே எமனை வீழ்த்தினர். காலம் அதிக்கிரமித்தால் சிருஷ்டி நசிக்கிறது. ஆகையால் காலனையும் காமனையும் தொலைக்க வேண்டியதாயிற்று. இதையே பாபம் அதிக்கிரமித்தமையால், தர்மம் நசித்ததெனவும், பாபத்தைத் தொலைக்கப் பாரத யுத்தம் நடத்தியதாகவும் கூறுகின்றனர். காமனையுங் கண்ணழலால் விழித்தநாளோ என்றால், காமனைப் பார்வையினால் எரித்த நாளோ என்று அருத்தமாகின்றது. பார்வையினால் சிருஷ்டி உண்

டாயிற்று. பார்வையினாலேயே சிருஷ்டி அழிவையும் பெறுகிறது. இவ்விரண்டும் காலத்துடன் சம்பந்திக்காதது. ஆகையால் பிரமனுக்கு வயதில்லை. பார்வைக்கே காமன் எனப் பெயர். பார்வையே எப்படி பார்வையை அழித்தது எனின், மூலாதாரத்தினின்று பார்க்கும் பார்வை யெல்லாம் பரிபூரணமானதாகவே இருக்கவேண்டும். விஸ்வாமித்திரனது பார்வைக் குறைந்தமையால் மேனகையுடன் சம்மந்தித்ததாகவும், சாகுந்தலைப் பிறந்ததாகவும் அபவாத மேற்பட்டது. இக்குறைவையே ஒற்றைக் கண்ணை மூடிக் கொண்டதாக சித்திரங்களில் காட்டுகின்றனர். ஆகையால் பரிபூரண மில்லாப் பார்வையே உதவாது. ஆகையால் பார்வையே பார்வையை அழித்தது. மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரித்த நாளோ என்பதில் மருவனாய் என்றால், மறைவிடமாய் என்று அருத்தமாகின்றது. குறைந்த பார்வையினால் மறைவிடமாயிற்று. பிருதுவி சம்பந்தம் உண்டாகிறது. அதையே விஸ்வாமித்திரன் மேனகையுடன் சம்பந்தித்ததாகவும், சாகுந்தலை பிறந்ததாகவும், சாகுந்தலையைப் பூலோகத்தில் வனத்தினிடமாக விட்டதாகவும், இவ்வாறாக வெல்லாம் கூறுகின்றனர். இங்கு மண் என்றால் பிருதுவி, விண் என்றால் ஆகாசம். இவற்றி னிடையேயுள்ள அந்தரிக்ஷம். இம்மூன்றையும் தவிர்த்த போதே பரிபூரணப் பார்வை யுண்டாகும். அவ்வாறு தவிர்த்தலையேத் திரிபுராதிகளை எரித்ததாகக் கூறுவர். இவைகள் யாவும் தாமஸ குணத்தின் சுபாவம். தருமம் நிலைபெற தாமஸத்தைத் தவிர்க்க வேண்டும். மான் மறிக்கை ஏந்தியோர் மாதோர்பாகம் என்றால் மான் மழுவேந்திய சிவபெருமான் பக்கல் என்று அருத்தமாகின்றது. அவ்விடம் திருக் கயிலையாம். கைலாயம் சேருவதற்கு முன் கம்யஸ்தானத்தை யடைய வேண்டும். அதையே திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே என திடசித்தமாகப் பாடினர். திருவாரூரி லுள்ள தியாகராஜ சுவாமியைப் பூலோகத்திற்குக் கொண்டு வருவதற்கு முன் அவர் தேவேந்திரனது மார்பில் வீற்றிருந்ததாக ஸ்தல புராணம் கூறுகின்றது. ஆகையால் திருவாரூர் என்னுமிடம் ஹிருதய கமலமே. அது கமலங்களைப் பற்றிய தென்பதைத் தெரிவிக்கும் பொருட்டு கமலாலயமெனத் திருக்குள மொன்றைத் திருவாரூரில் அமைத்

தனர். இவ்வாறாக திருப்பதிகள் யாவையும் ஹிருதய கமலத்தில் காணக்கூடும்.

இவ்வித அகண்டமான தத்துவங்களை நாம் கண்டறியாமல் உலகத்தில் வீண் காலக்ஷேபம் செய்துவிட்டு செல்கிறோம். மானிட ஜென்ம மெடுப்பது, மறுபடி ஈச்வரனை அடைவதற் கல்லவோ. ஈச்வரத் தன்மை நம்மில் ஆதியிலிருந்தே அமைந்திருக்கிறது. அதை நாம் பெருக்கிக் கொண்டால் வேண்டியவைகளைக் கூடிவைக்கும். அதற்காக நாம் முந்தி உலகத்திலுள்ள தத்துவங்களைக் கண்டறிய வேண்டும். உலக தத்துவங்கள் சதா மலினத்தால் பிடிக்கப்பட் டிருப்பதால் அவைகளைக் காண நாம் முந்திக் காலத்தைப் பரிசுத்தம் செய்யவேண்டும்.

## ஆகாசமே காலம்.

காலம் எப்பொழுதும் ஒன்றைப் பற்றியேயுள்ளது. பற்றுதலில்லாவிடில் காலமில்லை. காலம் குணத்தைப்பற்றியது. குணம் வஸ்துவைப் பற்றியது. வஸ்து ஆகாசமாகின்றது. ஆகையால் ஆகாசமே காலமாகின்றது. ஆகாசம் எவ்வாறெல்லாம் வியாபிக்கின்றதோ அவ்வாறெல்லாம அவர்களுக்குக் குணம் அமைகின்றது. ஆகையால் ஆகாசம் பரிசுத்தமானால் காலம் பரிசுத்தமாகின்றது.

## காலத்தைப் பரிசுத்தம் செய்யு முறை.

சகலமும் அடங்கியது ஓங்காரம். அதை உச்சரித்து வருவோமேயானால் காலம் பரிசுத்தமாகின்றது.

## ஓங்காரத்தை உச்சரிக்கு முறை.

முறை தெரியாதவர்கள் உச்சரித்தால் சகலமும் தலைகீழாய் நசிக்கச் செய்யும். அதற்காக முறை தெரிந்தவர்களே உச்சரிக்க வேண்டும். முறை தெரிந்தவர்களென அறிவார் கண்டுக் கொள்ளலாம். மூலாதாரத்தி னிடமாக ஓம் என்னும் சப்தம் உச்சரிக்கப்பட்டால் சகலமும் உற்பத்தியாகி வேண்டியவைகளை தரச்செயயும். அதற்கு அந்திஷ்டை யெனப்பெயர்,

## மதி.

மதியே ஞான மாகையால் தெரிந்ததே மதி. சற்று ஆராய்ந்துப் பார்த்தால் தெரியாதெல்லாம். தெரியவரும். அவ்வாறு ஆராய்ந்து பார்க்க பொறுமை வேண்டும். அவ்விதப் பொறுமையே ஞானம்.

## மரணம்

சரீரத்துள்ள சலன அழிவே மரணம். முக்தி அறிவானது ஆனந்தமாகின்றது. பிறகு மாயை அதன் பின் தொடர்கின்றது. மாயையே நாமாகிறோம். மாயை சத் தாகையால் அது வெளியாகும்போது சத்து போகிறது. அதை உலகத்தவர் செத்துப் போயிற்றென திரித்துச் சொல்கின்றனர்.

## கோயில் சமாதி.

கோயில் சித் ஆகாசம் தங்கிய இடம். சித் ஆகாசம் லேசாயுள்ளதாகையால், ஆத்மா பிரிந்தவுடன் உயரச் சென்று விடுகின்றது. அது உலகத்தில் தங்கும் பொருட்டு யோகிகள் அனேக பாடுபடுகின்றனர். ஆகையால் அவ்வாறு செய்யப்பட்டவர்கள் காலமாகிய பின் அவர்களி னஸ்தியை ஓரிடத்தில் அடக்கம்செய்து அதைச் சுற்றிக் கோயில் எனவும், சமாதி எனவும், கட்டடங்கள் கட்டி வைத்து, பூஜை நைவேத்யம் முதலியன நடத்தி வருகின்றனர்.

## சித் ஆகாசம்.

நமது சரீரத்திலும் சித் ஆகாசம் தங்கியே இருக்கின்றது. அறிவே சித் ஆகாசம். அதையே கடவுள் எனக்கூறுவர். கடவுள் என்றால், கடம் உள். அதாவது கடாகாசத்துள் இருப்பது. அதுவே சித் ஆகாசம். அதுவே மனது. ஆகையால், அறிவே மனது. அது கமலங்களைப் பற்றி யுள்ளது. கடாகாசம் நமது ஸ்தூல, சூட்சும, காரண, சரீரங்க ளாகின்றது. சித் ஆகாசம், லிங்க சரீரம் முதலியனவாகின்றது.

## கடாகாசம்.

கடாகாசம் நம்முடன் பேசுவது. இதையேப் பூர்வீகத்தில் ஆகாய வாணியின் அசரீர் வாக்கென்றனர். அது நாம் அவ்வா

காசத்துடன் சம்பந்திக்கும் காலங்களில் செவியி னிடததில் சப்த மாக உரைக்கும். அச்சப்தம் புத்திக் கெட்டுகின்றது.

ஓம்

நமச்சிவாய்ம்.

## ஆகாசம்.

ஆகாசமே காலமாகிற தென முந்திய உபந்யாசத்தில் எழுதி இருக்கின்றது. ஆகாசத்தி லுள்ள ஒளியினுலேயே இப்பிர பஞ்சம் யாவும் நிறைந்திருக்கிறது. அதினுலேயே எல்லாவற் றிற்கும் ஜீவகலை உண்டா யிருக்கிறது. அது குறைந்தால் ஜீவ கலை மாறும. கலை என்ருல் தோற்றம். தோற்றமே இப்பிரபஞ் சமாகக் காணப்படுவதெல்லாம். ஜகத் என்பதுவும் அதுவே. ஜகத் நாதன் என்பதுவும் அதுவே. நாதத்திலுள்ள ஓங்காரமே ஜகத்தாயிற்று. அவற்றினுலேயே ஈச்வரனுக்கு ஜகதீசன் என வும், மகா விஷ்ணுவுக்கு ஜகந்நாதன் எனவும் பெயர் வந்தன. நம் மிடத்துள்ள பஞ்ச அகத்தினின்றே பிரபஞ்சகம் என்பது உண் டாயிற்றென இவற்ருல் நன்கு விளங்குகின்றது. பிரபஞ்சத்தி லுள்ளவைகள் எல்லாம் ஆகாச நிர்க்குணமே. அதுவே சம குண மாகில் பிரபஞ்சத் தோற்ற மென்பது அழிவு பெறும். இவற் ைறக் குறிப்பிட்டே ஆகமம் முதலிய விதிகளும் ஏற்பட் டிருக்கின் றன.

பஞ்ச அகம் என்பது ஐந்து வகை வீடு. ஐந்து வகை அறிவு. அதாவது ஐந்து வகை குணம், பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் யென இவ்வைந்தும் ஒரே வஸ்துவில் அடங்கியன. அவ ற்றினுலேயே இப்பிரபஞ்சம் யாவும் நிறையப் பெற்றிருக்கின்றன. இவ்வைந்தும் ஏகோபவிக்கும் காலங்களில் பிரம்மமாகின்றது. தனித்திருக்கும் காலங்களில் வெவ்வேறுவித குணங்களாக மாறு கின்றன. அவற்றையே வஸ்துவின் குணபேதம் என்பர். ஒரே வஸ்துவில் இவ்வைந்தும் கலந்துள்ளது. அதுவே காலமாகின் றது. அதுவே ஆகாசம்.

ஓம்

நமச்சிவாயம்.

# க்ஷுத் அல்லது பசி.

---

க்ஷுத் என்பது ஆகாச மலினமே. ஆகாச மலினத்தினலே யே க்ஷுத் என்பது உண்டாகின்றது. கேவலம் பரிசுத்தத்தில் லயமாகில் க்ஷுத்தே கிடையாது.

## உணர்ச்சி.

முந்திய உபந்நியாசத்தில் ஐந்து வகை பூதபேதகங்களினலே யே இப்பிரபஞ்சகம் யாவும் நிரம்பி யிருக்கின்றன வெனவும், அவ் வைந்தும் ஏகோபவித்தால் பிரம்மமாகிற தெனவும் தனித்திருக் கும்போது வெவ்வேறு விதக் குணங்களாக மாறுகிறதெனவும் கூறி இருக்கின்றது. உலகத்தில் தற்காலம் நாம் அடைந்திருக் கும் உணர்ச்சி நிஜமான தன்று. மாயா சம்பந்தமானது. பஞ்ச பாண்டவர்களுக்கு மாயை என்பவன் கட்டி வைத்த அரக்குமாளி கையைப் போன்றது. அவ்வாருகவே நமது சரீரமும் ஏற்பட்டி ருக்கின்றது. ஆகையால் அது நிலையற்றதாயிற்று. நிலையின்மை யினின்றும், நிலையுண்மையை அடைவதே உணர்ச்சி. அதுவே நிராகாரம். ஆகையால் நிராகார திருஷ்டியே பேருணர்ச்சி. அவ் வித உணர்ச்சியை நாம் உலகத்தில் அடைவது மிக அவசியம். இவ்வாருகப் பிரபஞ்சக ஞானத்தை அடையும்போது பிரம்மத் தில் லயமாகிரும். பிரம்மத்தில் லய மாகும்போது சிருஷ்டி ஜகத்தென்பது இவைகள் யாவும் தெரியாது. அந்நிலையே சமாதி. அதற்கே பிரம்ம சமாதி எனவும், நிர்க்குணமான பரம் என்வும் பெயர். அதையே "சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ் சோதியே சுகவாரியே" எனத் தாயுமானவர் பன்னிரண்டு பாடல் களில் பாடினர். பிரம்மத்தில் லய மாகும்போது எல்லாவற்றி லும் கலந்து எங்கும் நிறைகிருேம்.

## பிரம்மத்தில் அடையும் மார்க்கம்.

வஸ்துவில் பற்றே வாசனை, வாசனுதி அதீதமே விரக்தி. விரக்தியே வைராக்யம். அவ்வித வைராக்யமே துறவறம். துற வறம் என்ருல், தான் என்பதில் பற்றுதலில்லா திருத்தலே. அது

வே சமாதி நிலைமை. அதுவே துறவாம். எல்லாவற்றையும் துறத்தலே சமாதி. சமாதி என்றால் ஆதியில் சமம். சமம் ஆதி என்பது சமாதி எனத் திரிந்தது. ஆதியும் அந்தியமும் இல்லாமல் ஏகநிலையில் நிற்றலே சமாதி. ஈச்வரன் எப்போதும் இந் நிலையில் நிற்பவனாகையால் ஆதிமத்யாந்த ரகிதன் எனப் பெயர் கொண்டனன். அதுவே சூன்ய நிலை. சூன்யம் என்றால் காலமில்லாதிருத்தலே. காலத்தில் லயமாதலே காலமில்லாதிருத்தல்.

### காலமே பிரம்மம்.

ஈச்வரன் எப்பொழுதும் காலத்தில் லயமாய் இருப்பவனாகையால் அவனது நாகாபரணமானது காலத்தைக் குறிப்பிடுகின்றது. காலம் ஒளியினின்றுண்டாவது. ஒளி பிரம்ம மாகையால் காலமே பிரம்மம்.

### சிலுவை.

சிற்றம்பலம் என்பது சிதம்பரம் எனத் திரிந்தது. சிதம்பரம் என்றால், சித் அம்பரமாக விளங்குவது. அம்பரம் என்றால் ஒளி. ஆகையால் சிதம்பரம் என்பது சித் ஒளியாக இருப்பது. சிலம்பம் என்பது சிதம்பரம் என்பதினின்றும் ஏற்பட்டது. ஒளியே காலமாகையால் சிலம்பும் என்பது காலமாகின்றது. சிலம்பம் என்பதினின்றும், சிலுவை என்பது தோன்றியது. ஆகையால் சிலுவை என்றால் காலம்.

### கிருஸ்து.

கிருஸ்து என்றால் ரக்ஷகன் என்றுணர்கின்றனர். கிருஸ்துவும் லோகரக்ஷகனது புத்ரனே. சித் ஜகத்தாகும்போது அதனின்றும் தோன்றிய ஒளியே கிருஸ்து. ஆகையினாலே கிருஸ்து லோகரக்ஷகன் எனப் பெயர் கொண்டனன். சித் என்பது லோகம் எங்கும் வியாபித்திருப்பது. கிருஸ்துவினது மதமும் சைவ சமயமே. எல்லாவற்றிற்கும் காரணபூதமாயுள்ள பர தெய்வமே சிருஷ்டிக் காதாரம் எனவும், மற்றவைகள் யாவும் அவற்றிற் குட்பட்டவைகள் என்பதும் அவரது கொள்கை. அதற்காகவே விக்ர காராதனைக்கூடாதெனத் தவிர்த்தனர். கேவலம் நிராகாரத்தையே பூஜிக்கச் செய்தனர். நிராகாரம் சூன்யமாகையால், சூன்யத்

தில் வாழ்பவர் சிவன். ஆகையால் கிருஸ்துவின் மதம் சைவ மதமே. அதை உலகத்தவர் ஆசாரத்தில் வெவ்வேறு விதமாகப் பாவிக்கின்றனர்.

### கிருஸ்துவை சிலுவையில் அறைதல்.

கிருஸ்துவை சிலுவையில் அறைந்தனர் என்றபோது சிலுவைக் காலத்தையும், காலம் ஜோதியையும் குறிப்பிடுகிறபடியால் கிருஸ்துவானவர் ஜோதியை அடைந்தனர் எனத் தெரிவிக்கின்றது. அதாவது வஸ்துவே தாமாகினர். அதுவே சமாதி. சமாதியை அடைந்தமையால் சிலுவையில் அறைந்த மூன்றும்நாள் மீளவும் மரித்த தேகத்தை அடைந்து சுவர்க்காரோஹணப் பதவியை அடைந்தனர். ஜோதியுடன் ஜோதியாயினர்.

### சம்பிரக்ஞாத சமாதி

சம்பிரக்ஞாத சமாதி என்பது எல்லாவித பிரக்ஞையுடன் சமாதிக் கேகுதல். இது சமாதிகளில் விசேஷித்தது. இதில் மும்மூர்த்திகளும் தரிசனமாவர். இதையே கூட்டுடன் கைலாசம் செல்வதென்பது. கபால மோக்ஷமென்பதுவும் இதுவே.

---

ஓம்

நமச்சிவாயம்.

## நிராகாரம்.

---

கடவுள் நம்மில் இருப்பதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. மாயையினால் அது மறைக்கப்படுகின்றது. சூரியனை மேகமானது மறைப்பதுபோல், மாயையானது அதை சதா மூடுகின்றது. மாயை என்பது நம்முடைய குணமே. நம்முடைய குணமே நமக்கு நிழலாக மறைக்கின்றது. ஆகையால் மாயை

யை அடக்கி ஆள்வதே திறமை. மாயையானது துலங்க ஜபதப முதலியன வேண்டும்.

கடவுள் நிர்மல, நிர்க்குண, நிரஞ்சன, நிராலம்ப மானவர். நிராலம்பமே நிராகாரம். நிராகாரம் எல்லாவற்றிலும் உள்ளதே. எல்லாவித ஆகாரமும் கலந்ததே நிராகாரம். ஆகையால் ஆகார மானது சதா ஒன்று மற்றொன்முக மாறிக்கொண்டே இருப்பது. தற்கால நிலையை மாத்திரம் உரியது. ஆகாரமே ஜகத். ஜகத் மாயையினுல் சிருஷ்டிக்கப்பட்டது. நிராகாரத்தில் அடையும் போது சிருஷ்டி ஜகத் யாவும் நம்மில் லயமாகின்றன. எல்லா வஸ்துவும் தானே யாகிருன். தான் என்பது தனியே காணப் படுவதில்லை.

கடவுள் நிர்மல, நிர்க்குண, நிரஞ்சன, நிராலம்பன் என்பதில் நிர்மலம் என்ருல், மலச் சத்துக்கள் விலகியது. மலச் சத்துக்கள் ஐந்து. அவை நம்மில் தோன்றியவைகளே. தோற் றமே நினைவு. நினைவே மனஸ். மனஸ் பஞ்ச பூதங்களினின் றுண்டானது. ஆகையால் அவை தோன்றிய வண்ணம் மறை யும். நம்மிடத்தில் அவை வேருக இருப்பதில்லை. நாமே அவை காலத்தில் அவை மறையும். அப்போது எல்லா வஸ்துவும் தா னே யாகிருன். அதுவரையில் அவை வேருகக் காணப்படுவதில்லை ஆகையால் குணபேதக மில்லாதது கடவுள். நிர்க்குணம் என் ருல் தோற்றமில்லா திருத்தல். குணங்கள் மலத்தினுல் ஏற்பட் டன. மலங்கள் அழியும்போது குணமழியும். குணங்கள் ஏழு விதம். அவையே சப்த ஆகாரம். அவையே ஏழுவித நிறம். சப்த லோகம் என்பதுவும் சப்தகுல பர்வதம் என்பதுவும் சப்த சாகரம் என்பதுவும், சப்த நதி என்பதுவும், சப்த ரிஷிகள் என்பது வும், சப்த கன்னிகைகள் என்பதுவும் அவையே. நிரஞ்சனம் என்பதில் அஞ்சனம் என்ருல் பார்வை. நிரஞ்சனம் என்ருல் பா ர்வை இல்லாதது. பார்க்கக் கூடாமையானது. எல்லா வஸ்துவி லும் காணப்படுவது தாமே. ஆகையால் நமக்கு அன்யமாக யா தொன்றும் இல்லை. ஆகையால் காணப்படுவதுவும் காண்பதுவும் அதுவே. ஆகையால் நிரஞ்சனமானது. நிராலம்பம் என்பதில் அம்பம் என்ருல் ஒளி. அம்பரம் என்ருலும் ஒளியே. ஆலம்பம்

என்றால் ஆலகாலம். ஆலகாலமானது விஷமாகையால் குணத்தைத் தெரிவிப்பது. ஆகையால் நிராலம்பம் என்றால் குணமில்லாதது. குணமில்லாதது சூன்ய ஒளி. அதாவது நிராகாரம். நிராகாரம் வஸ்துவில் தோன்றுவது. சித் மாயையினின்றும் விலகிய போது இவை யாவும் காணப்படும்.

---

ஓம்

நமச்சிவாயம்.

## பஞ்சலக்ஷணம்.

கடவுள் நமக்கு அன்யமாக இருப்பதென்பது பொய் எல்லாவற்றிலும் உள்ளபடியே நம்மிலும் இருக்கிறார். அவரைத் தரிசிக்க நெடுந்தூரம செல்லவேண்டிய தவசியமில்லை. எதைப் பார்த்த போதிலும் அவ்வஸ்துவே. எவ்வஸ்துவிலும் அவரது திருவடிவேயே காணப்படுகின்றது. எல்லாவித ஆகாரமும் அவரே.

மேகமென்பது ஜலமே. உஷ்ணத்தால் ஜலமானது ஆவியாய் மேகமாயிற்று. குளிர்ச்சியை அடைந்தால் திரும்பவும் ஜலமாகின்றது. அவ்வாறாகவே குணபேதகங்களினால் இச்சொரூபத்தை அடைந்திருக்கின்றது. குணரகிதமாகியபோது தத் சொரூபமாகும்.

கடவுளை அரூபி என்கின்றனர். அரூபி யென்றால் ரூபமில்லாதவர், நான்கெழுத்தினை யுடையவர். எல்லாவித ரூபமும் அவருடையதே யாகையால் அரூபி என்றழைத்தனர்.

கர்ம மென்பது குணம். குணபேதகமுள்ள வரையில் கர்ம தொந்தம் விடுபடாது. குணரகிதமாகியபோது விடுபடும். அவ்வாறு விடுபட்டபோதே ஆத்ம லாபத்தை அடையலாம். அதுவே கடவுள். அ. வு. ம. இம்மூன்று வஸ்துவும் கூடியது. ஆத்மா, அதுவே ஓங்காரமுமாம். ஆகையால் ஓங்காரமே கடவுள். அதுவே ஆத்மாவுமாம்.

ஓங்காரமானது சப்தமாகையால், சப்தமே கடவுள். சப்தம் வஸ்துவினின்றும் உண்டாகியது. ஆகையால் சப்தமே கடவுள். வஸ்துவே நாம்.

---

ஓம்

நமச்சிவாய.

## ஜீவ அஜீவ திசைகள்.

---

மானிடனுக்கு ஜீவதிசை, அஜீவ திசையென இரண்டுவித திசைகளுண்டு. அஜீவதிசை என்பது மரம், கல், புற், பூண்டு முதலியவைகளாக இருந்தவைகளாம். இதனில் பாப புண்ய மென்பதே கிடையாது. ஜீவதிசையை அடைந்தபோதே அவை ஏற்படுகின்றன. ஜீவ திசையை அடைந்தபோதிலும் மானிட ஜன்மம் உண்டாகியபோதே அவை ஏற்படுகின்றன. ஆகையால் மானிடன் அவற்றை விலக்கிக் கொண்டபோதே முக்தனாகிறான்.

### பாபபுண்யம்.

பாபம் என்பது மலின ஆகாசத்தால் ஏற்படுவது. மலின ஆகாசம் சதா மானிடனைப் பற்றுகின்றது. மலினத்தை விட்டு ததந்தாத்தில் அடையும்போது பரிசுத்தர்களாகிறோம். ததந்தாம் என்பது தத்வ அந்தரம். மலினமே நமக்கு எல்லாவித தொல்லைகளையும் உண்டு செய்வது. மலினம் நாமாக ஏற்படுத்திக்கொண்டதே நிரந்தரத்தினின்றும், ததந்தரத்தை அடையும்போது அவை ஏற்படுகின்றன. ததந்தாத்தை அடையாமல் நாம் ஜீவன் முக்தர்களாவதில்லை. ததந்தரமே சுத்த ஆகாசம். ததந்தரம் 'என்பது தன்னிலை. தன்னிலையினின்றும் பாநிலை அடையும்போதே நாம் அது வாகிறோம். அது என்பது எங்கும் நிறைந்துள்ளது எல்லாவற்றிலும் ஒளியாக ஓங்குவது. ஏகபராபரம். ஏக பராபரமானது ஒன்றே. இரண்டில்லை.

### கேவல நிராகாரம்.

கேவல நிராகாரமானது ஜகத் ஜோதியாக விளங்குவது. ஒளி ஓங்கியது. நிர் ஆகாரம் என்பது நிராகாரம் எனத் திரிந்தது. ஆகையால் ஆகாரம் என்பது ஓங்காரத்தின் சப்தமே யாகும். சப்தமே ஒளி. கேவலம் என்பதில் கைவல்யமே கேவலம். கைவல்யம் என்றால் தான் அதுவாக முடிதல்.

---

ஓம்

நீலாம்பரம்

## பாவனை.

---

ஜீவனில் செய்வது, செய்யப்பட்டது, செய்யாதது இதின மூன்றுவித பாவனைகளுண்டு. இவற்றுள் செய்யாததே சாக்ஷி. எவ்விதத்திலும் பாதிக்கப்படாதது. செய்வதும் செய்யப்பட்டதும் ஒன்றே யாகும். அவற்றினாலேயே எல்லாக் காரியமும் நடைபெறுகின்றன. காரியத்திலும் காரிய மில்லாதபோதும், அதாவது காரியா அவஸ்தையிலும், காரணா அவஸ்தையிலும் சாக்ஷி ஒன்றுண்டு. காரியமே ஜகத். காரியமில்லாதது சூன்யம். இம் மூன்றுவித பாவனைகளும் ஒன்றிலேயே அடங்கி இருக்கின்றது. அது வேதத்வநிலை. நடத்துகிறதும், நடத்தி வைப்பதுவும், நடத்தாததுவும் அதுவே. இவற்றுள் நடத்தாததே சாக்ஷி.

### ஆகாசத்தின் பெருமை.

ஆகாச முள்ள வரையிலேயே கடத்திற்குப் பெருமை இருக்கின்றது. ஆகாசம் வெளியாகில் அப்பெருமை போய் விடுகின்றது. சவமாகின்றது. சவம் மண்ணாகின்றது. மண் மண்ணுடன் கலந்து விடுகின்றது. அவ்வாறு மண் மண்ணுடன் கலப்பதற்கே தஹனமெனவும், சமாதி யெனவும் பெயரிட் டழைக்கின்றனர். ஆகாசம் வெளியாகில் கடத்தில் சப்தமில்லை. சப்தமென்றால்

ஓங்காரம். ஓங்காரம் ஓங்காரத்திலேயே பிறக்கின்றது. ஓங்காரத்திலேயே ஒடுங்குகின்றது. இதுவே தத்வ நிலை. நித்ய நிலை. பேரின்ப நிலையென்பதுவும் இதுவே. ஆகையால் மண்ணும் விண்ணும் கலந்தபோதே அவற்றிற்கு பெருமை ஏற்படுகின்றது. மண் மண்ணாக இருக்கும் வரையிலும், விண் விண்ணாக இருக்கும் வரையிலும் அவை யாதொரு பெருமையையும் அடைவதில்லை. அதற்காகவே சிருஷ்டி ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் சிருஷ்டி பெருமைக்காகவே ஏற்பட்டது.

## முக்தி நிலை.

பேரின்ப நிலையை ஜீவித காலத்திலேயே அடைபவரும் உண்டு. அப்பொழுது கடாகாசம் கடாகாசத்தில் ஒடுங்கி விடுகின்றது. சித் மஹாகாசத்தில் ஒடுங்குகின்றது. இன்னிலையே பேரின்பம். அப்பொழுது சிருஷ்டி காணப்படுவதில்லை. தன் னிலையில் தானாகிறான். தன்னிலையே பேரின்பம். சித் மஹா காசத்தினின்று பிரிந்தபோதே சிருஷ்டி ஏற்படுகின்றது. பிறப்பு உண்டாகின்றது. பிறப்பு என்றால், பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என இம்மூன்றையும் குறிப்பிடுகின்றது. சித் மஹாகாசத்தினின்றும் பிரிந்ததே விருத்தியில் இருக்கின்றது. திரும்பவும் மஹாகாசத்தில் அடங்கும்போது சமத்தில் அடங்குகின்றது.

## நீலமேகன்.

நீலாம்பரம் என்றால் நீலமேகமாகிய ஒளி. நீலமேகன் ஸ்ரீ கிருஷ்ணன். ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணன் ஒளியினால் காணப்படுபவன். அதற்காகவே அவனைக்கோகுலத்தில் பிறந்தவனென்றனர். கோகுலம் என்றால் ஜோதி நிலைமை. ஆகையால் ஜோதி நிலைமையை அடைந்தவர்களே கிருஷ்ணனைக் காணக்கூடும். காணப்படுவதும் காண்பதுவும் அதுவே.

## மௌனம்.

பேசாதிருத்தலே மௌனமென்பர். தன்னிலையைக் காண்பதே மௌனம். அப்பொழுதே மௌனம் உண்டாகின்றது.

தன்னிலையே தத்வநிலை. தத்வ நிலையை அடைந்தபோதே மௌனியாகிறான். அப்பொழுது அவனுக்கு உலகவாசனை நீங்குகின்றது. துறவியாகிறான். உலக வாசனையைத் துறத்தலே துறவாம். துறந்து நின்றது பரவசம்.

## மோக்ஷம்.

மோக்ஷமென்பது எல்லா வஸ்துவிற்கும் உள்ளதே. சர்வம் தன்னில் லயமாவது, தான் எல்லா வற்றிலும் லயமாவது மோக்ஷம்.

முற்றிற்று.

சிவஞ்ஞானபோதம் பிரஸ், சென்னை.

ஓம்



சிவஞ்ஞானபோதம் பிரஸ்,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.